

வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

2021

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையானது, பல்கலைக்கழகத்தினது கல்வி நடவடிக்கைகள் மற்றும் அடைவுகள் பற்றிய நிருவன கண்ணோட்டத்தின் விரிவான சுருக்கத்தை வழங்குகிறது. இதில் உள்ள தகவல்கள் உரிய துறைகளினால் சமர்ப்பிக்கப்பட்டு தகவல் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவினால் தொகுக்கப்பட்டுள்ளது.

நோக்கு

விஞ்ஞானங்கள், தொழிநுட்பங்கள், மானிடவியல்களில் உயர்கற்கைகளுக்கும், புத்தாக்கங்களுக்குமான தென்னாசியாவின் ஒரு சர்வதேச புகழ்பெற்ற நிலையமாக விளங்குதல்.

இலக்கு

பிராந்திய மற்றும் தேசிய தேவைகள், சமூக நல்லிணக்கம், பங்காளார்களின் வலுவாக்கம், திருப்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு அறிவினையும், புத்தாக்கங்களையும் உருவாக்கி பரப்புவதன் ஊடாக சர்வதேச தரத்திலான உயர் கற்கைகளுக்கான விரிவான வாய்ப்புகளை வழங்குதல்

குறிக்கோள்கள்

1. கல்வித் தரத்தில் சிறந்து விளங்குதல்.

2. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் அறிவுப் பரவல் ஆகியவற்றில் சிறந்து விளங்குதல்.

3. சமூக மற்றும் தொழிற்துறை எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் சிறந்து விளங்குதல்.

4. உட்கட்டமைப்பு மற்றும் மனித வள மேம்பாட்டில் சிறந்து விளங்குதல்.

5. தேசிய மற்றும் உள்ளக ஒத்துழைப்பில் சிறந்து விளங்குதல்.

6. நல்லாட்சி மற்றும் நிலைப்பேறு ஆகியவற்றில் சிறந்து விளங்குதல்.

உபவேந்தரின் செய்தி



பேராசிரியர். ஏ. றமீஸ்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையானது மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் அடைவுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் அடைவுகளை சிறப்பித்துக் காட்டுகிறது. மேலும் சமூக மற்றும் தேசிய அபிவிருத்தியில் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பினையும் வருடாந்த அறிக்கையானது விபரித்துக்காட்டுகிறது. இவ்வருடாந்த அறிக்கையானது 2019-2024 காலப்பகுதிகளுக்குத் தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டங்களுக்கமைய பல்கலைக்கழகத்தின் அடைவுகளை பகுப்பாய்வு செய்கின்ற அதேவேளை, குறைபாடுகளையும் அவற்றிற்கான பொருத்தமான நியாயப்படுத்தல்களையும் குறிப்பிட்டுக்காட்டுகின்றது.

“Vistas of Prosperity and Splendor” உடன் இணைந்த அரசாங்கத்தின் கொள்கைகளை பல்கலைக்கழகம் செயற்படுத்தி வருகிறது. மேலும், திறைசேரி நிதி மற்றும் AHEAD நிதி உதவியுடன், பல்கலைக்கழகத்தின் செயற்திறன் மற்றும் மாணவர்களுக்கான சேவைகளின் தரம் மேம்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, மாணவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பல சிறிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன, இச்செயற்பாடானது இறுதியில் மாணவர்கள் தங்களது திறன் மேம்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கும். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழிநுட்ப பீட கட்டிடம் மற்றும் பல்நோக்கு கேட்போர் கூடம் குறிப்பாக மாணவர்களின் நலனுக்காகவும் பல்கலைக்கழகத்தின் பொது நலனுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஸ்கோபஸ் (Scopus), ஸிமாகோ (Scimago) மற்றும் கிளாரிவேட் அனாலிட்டிக்ஸ் (Clarivate Analytics) தரவுத்தளங்கள் போன்ற நன்கு அறியப்பட்ட தரவுத்தளங்களில் சுட்டுவரிசையாக்கப்பட்ட ஆய்விதழ்களில் வெளியீடுகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதில் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்கள் குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்துள்ளனர். வெபோமெட்ரிக் உலக தரவரிசையில் பல்கலைக்கழகம் முன்னேறி

வருகிறது. மேலும், பல்கலைக்கழகங்களின் நிலைத்தன்மை செயற்றிறன் அடிப்படையில் பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்தும் UI GreenMetric உலக பல்கலைக்கழக தரவரிசையின் கீழ் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே முதலிடத்தைப் பெற்றதன் மூலம் பல்கலைக்கழகம் அதன் வரலாற்றில் ஒரு அழியாத முத்திரையைப் பதித்துள்ளது. மேலும், பல நன்கு தகுதி வாய்ந்த கல்வியாளர்கள் மற்றும் பிற ஊழியர்களுடன் சேர்ந்து பல்கலைக்கழகத்தின் மனித மூலதனம் பலப்படுத்தப்பட்டது. அதே சமயம், சில கல்வியாளர்களை பேராசிரியர்களாக உயர்த்தியமை, சேவைகளை வழங்குவதில் பல்கலைக்கழகத்தின் திறனை மேலும் அதிகரித்தது.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பல்கலைக்கழகத்தின் சாதனைகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஆராயலாம். அத்தோடு 2021ம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயற்றிறனை உயர்த்துவதற்காக கடினமாக உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர். ஏ. றமீஸ்
உபவேந்தர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

உள்ளடக்கம்

தலைப்பு		பக்க இல.
நோக்கு		
இலக்கு		
குறிக்கோள்கள்		
உபவேந்தரின் செய்தி		
பல்கலைக்கழக நிர்வாகம்		01
I	பல்கலைக்கழகப் பேரவை	01
II	பல்கலைக்கழக மூதவை	03
III	நிறுவன கட்டமைப்பு	06
1.	பல்கலைக்கழக செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு	07
1.1	சுருக்கமான அறிமுகம்	07
1.2	தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள்	08
1.3	பட்டப்பின்படிப்பு கற்கைகள்	11
1.4	உலக தரப்படுத்தல்	13
1.5	மாணவர் பரம்பல்	13
1.6	ஊழியர் பரம்பல்	14
1.7	கல்விசார் பதவியணியினர் பரம்பல்	14
1.8	இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகங்கள்	15
1.9	அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள்	21
1.10	தவறுகளும் நியாயப்படுத்தல்களும்	25
1.11	எதிர்காலத் திட்டங்கள்	26
2.	வளங்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விபரம்	29
2.1	மாணவர் பரம்பல் மற்றும் நிரந்தர ஊழியர்கள்	29
2.2	உள்நாட்டு மாணவர்கள் விபரம்	30
2.3	வெளிநாட்டு மாணவர்கள் விபரம்	35
2.4	பட்டம் பெற்றோர் விபரம்	36
2.5	விடுதிகள்	39
3.	மனித வளங்கள்	41
3.1	ஆளணி விபரங்கள்	41
3.2	கல்விசார் மற்றும் கல்வியுதவி ஊழியர்கள்	42
3.3	நிர்வாக, நிதி நிர்வாக மற்றும் ஏனைய நிறைவேற்று ஊழியர்கள்	43
3.4	கல்விசாரா மற்றும் ஏனைய நிர்வாக ஊழியர்கள்	43
4.	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	44
4.1	ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரம்	44
4.2	2021 இல் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த சர்வதேச ஊழியர்களின் விபரம்	65
4.3	2021ம் ஆண்டில் பொது மக்களுக்கு அறிவூட்டுதல்	65

	தொடர்பில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான விபரம்	
4.4	பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் பற்றிய விபரம்	67
4.5	கல்வி மற்றும் நிர்வாக ஊழியர்களின் தொழில்முறை மேம்பாட்டிற்காக (கருத்தரங்கம்/ பட்டறைகள்/ பணியாளர்கள் மேம்பாடு/ பயிற்சி/ குறுகிய பாடநெறிகள்) பெறப்பட்ட வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்/ உதவித்தொகைகள்/ விருதுகள் பற்றிய விபரங்கள்.	68
4.6	வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்கள்/ ஆராய்ச்சி/ நிறுவனங்கள் / நன்கொடையாளர்/ முகவர்களுடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விபரங்கள்	68
4.7	2021 இல் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்காக பதிவு செய்யப்பட்ட கல்விசார், கல்வியுதவி மற்றும் நிர்வாக ஊழியர்கள்	69
4.8	2021ல் தொடர்புடைய பட்டப்பின் படிப்புகளைப் பூர்த்தி செய்த கல்விசார், கல்வி உதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் விபரம்	70
4.9	நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளின் விபரங்கள்	71
5.	மூலதனப்பணிகள்	77
5.1	செயற்திட்டங்களுக்கான செலவீடுகள் தொடர்பான விபரம்	77
6.	நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகள்	78
6.1	நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளின் சாதனை	78
6.2	சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	81
7.	நிதி முன்னேற்ற விபரம்	84
7.1	வருமானம்	84
7.2	திரண்ட வருமானம்	84
7.3	பிரதான திட்டங்களுக்கான மீண்டுவரும் செலவினம்	84
	7.3.1 கல்விச்சேவைகளுக்கான மீண்டெழும் செலவினம்	84
7.4	மூலதனச் செலவினம்	85
7.5	செலவினம்	85
7.6	நிதிச் செயல்திறன் பகுப்பாய்வு – 2021	85
	7.6.1 தலா மாணவருக்கான செலவு (மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள்)	85
7.7	வருடாந்த கணக்குகள் – 2021	86
8.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை -2021	103
9.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான அவதானங்கள்	114

பல்கலைக்கழக நிர்வாகம்

1. பல்கலைக்கழக பேரவை

பல்கலைக்கழக பேரவையானது பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகார சபையாகவும், பரிபாலன அதிகார சபையாகவும் காணப்படுகின்றது. 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 44 இன் படி அமைக்கப்பட்ட பல்கலைக்கழக பேரவை, 2021 இல் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பதிவாளர் பேரவையின் செயலாளராகக் காணப்படுகின்றார்.

பதவிவழி உறுப்பினர்கள்

பெயர்	பதவி
பேராசிரியர். கலாநிதி. ஏ. றமீஸ் பேராசிரியர். கலாநிதி. எம்.எம்.எம். நாஜிம்	உபவேந்தர் (தலைவர்) *(09.08.2021 முதல்)* உபவேந்தர் (தலைவர்) *(08.08.2021 வரை)*
கலாநிதி. எஸ்.எம். ஜுனைதீன்	பீடாதிபதி/பொறியியல் பீடம்
பேராசிரியர். கலாநிதி. எஸ்.எம்.எம். மஸாஹிர்	பீடாதிபதி / இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்
கலாநிதி. திருமதி. எஸ். சபீனா. எம்.ஜி. ஹஸன் பேராசிரியர். கலாநிதி. எஸ். குணபாலன்	பீடாதிபதி/முகாமைத்துவ வர்த்தக பீடம் *(30.06.2021 முதல்)* பீடாதிபதி/முகாமைத்துவ வர்த்தக பீடம் (29.06.2021)*வரை*
கலாநிதி. யூ.எல். சைனுதீன்	பீடாதிபதி /பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
பேராசிரியர். கலாநிதி. எம்.எம். பாஸில் பேராசிரியர். கலாநிதி. ஏ. றமீஸ்	பீடாதிபதி/ கலை கலாசார பீடம் *(16.08.2021 முதல்)* பீடாதிபதி/ கலை கலாசார பீடம் *(08.08.2021 வரை)*
கலாநிதி. யூ.எல்.ஏ. மஜீட்	பீடாதிபதி/தொழிநுட்ப பீடம்
கலாநிதி எம்.எச். ஹாறூன்	மூதவை பிரதிநிதி
கலாநிதி. திருமதி. எஸ். சபீனா. எம்.ஜி. ஹஸன்	மூதவை பிரதிநிதி *(29.06.2021 வரை)*
பேராசிரியர். திருமதி. எப்.எச்.ஏ. றவூப்	மூதவை பிரதிநிதி *(18.08.2021 முதல்)*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்	
திரு. ஐ.எம். ஹனீபா	மேலதிக பணிப்பாளர் நாயகம் இறப்பர் அபிவிருத்தித் துறை
கலாநிதி. அன்வர்.எம்.முஸ்தபா	தவிசாளர் / கிழக்கு மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சபை
பொறியியளாளர். முஹினுதீன் அப்துல் காதர்	பொறியியலாளர் / முகாமைத்துவப் பணிப்பாளர், பீற்றா இன்டர்நேஷனல் கொழும்பு .
கலாநிதி.டி.எஸ்.ஆர்.டி.ஆர். றஜப்	வைத்திய அத்தியேட்சகர், ஆதார வைத்தியசாலை, பொத்துவில்
பொறியியளாளர். என்.டி. மொஹமட் சிராஜுடீன்	ஓய்வு பெற்ற பிரதம பொறியியளாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, அம்பாறை.
திரு. எம்.சி. மொஹமட் நவாஸ்	சட்ட வழக்கறிஞர்
பேராசிரியர். கொலின் என். பீரிஸ்	பணிப்பாளர் கல்வி மேம்பாடு மற்றும் தர உறுதிப்படுத்தல், இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம்.
திரு. ஜே.எம். நளீர்	கணக்காளர், பிரதேச செயலகம், மூதூர்
திரு. டி.எம்.எல். பண்டாரநாயக்க	செயலாளர், விவசாய அமைச்சு
பேராசிரியர். திருமதி. ஹேமா எம்.கே.கே. பத்திரன	ஓய்வு பெற்ற ருஹுணு பல்கலைக்கழக இரசாயனவியல் துறை பேராசிரியர்.

செயலாளர்

திரு. எச். அப்துல் சத்தார், பதிவாளர்.

பல்கலைக்கழக மூதவை

1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டங்கள் பிரிவு 44 மற்றும் திருத்தப்பட்ட 1985ம் ஆண்டு 7ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 24 இற்கும் அமைய அமைக்கப்பட்ட 2021ம் ஆண்டிற்கான பல்கலைக்கழக மூதவை பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருந்தது.

பதவிவழி உறுப்பினர்கள்

பேராசிரியர். கலாநிதி. ஏ. றமீஸ்	உபவேந்தர் (தலைவர்) *(09.08.2021 முதல்)*
பேராசிரியர். கலாநிதி. எம்.எம்.எம். நாஜிம்	உபவேந்தர் (தலைவர் *(08.08.2021 வரை)*
கலாநிதி. எஸ்.எம். ஜுனைதீன்	பீடாதிபதி/பொறியியல் பீடம்
பேராசிரியர். எஸ்.எம்.எம். மஸாஹிர்	பீடாதிபதி / இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்
கலாநிதி. திருமதி. எஸ். சபீனா.எம்.ஜி. ஹஸன்	பீடாதிபதி/முகாமைத்துவ வர்த்தக பீடம் *(30.06.2021 முதல்)*
பேராசிரியர். கலாநிதி. எஸ். குணபாலன்	பீடாதிபதி / முகாமைத்துவ வர்த்தக பீடம் *(29.06.2021 வரை)*
கலாநிதி. யூ.எல். சைனுதீன்	பீடாதிபதி /பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
பேராசிரியர். கலாநிதி. எம்.எம். பாஸில்	பீடாதிபதி / கலை கலாசார பீடம் *(16.08.2021 முதல்)*
பேராசிரியர். கலாநிதி. ஏ. றமீஸ்	பீடாதிபதி /கலை கலாசார பீடம் *(08.08.2021 வரை)*
கலாநிதி. யூ.எல்.ஏ. மஜீட்	பீடாதிபதி/தொழிநுட்ப பீடம்
பேராசிரியர். கலாநிதி. ஏம்.ஏ.எம். றமீஸ்	
பேராசிரியர். திருமதி. எப்.எச்.ஏ. றவூப்	
பேராசிரியர். ஏ.எல்.ஏ. றவூப்	
பேராசிரியர். கலாநிதி.ஏ. ஜௌபர்	
பேராசிரியர். கலாநிதி. ஏ.எம். முஸாதிக்	
பேராசிரியர். கலாநிதி. எம்.பி.எம். இஸ்மாயில்	
பேராசிரியர். கலாநிதி.ஏ. ஜௌபர்	கணக்கியல் நிதித் துறை *(01.07.2021 வரை)*
பேராசிரியர். கலாநிதி. ஏ.எம்.எம். முஸ்தபா	முகாமைத்துவத்துறை *(01.07.2021 முதல்)*
பேராசிரியர். கலாநிதி. ஏ.எம். றஸ்மி	
பேராசிரியர். கலாநிதி. எம்.ஐ.எம். ஹிலால்	சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறை

பேராசிரியர். கலாநிதி. எஸ். குணபாலன்	
பேராசிரியர். எம்.ஏ.எல். அப்துல் ஹலீம்	
பேராசிரியர். கலாநிதி . கே.எம். முபாறக்	
பேராசிரியர். கலாநிதி. எம்.ஐ.எம். கலீல்	
பேராசிரியர். எஸ். சப்ராஸ் நவாஸ்	முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்ப துறை
பேராசிரியர். எம்.ஏ.எம். பௌஸர்	அரசறிவியல் விஞ்ஞானங்கள் துறை *(16.08.2021 முதல்)*
பேராசிரியர். கலாநிதி. எம்.எம். பாஸில்	அரசறிவியல் விஞ்ஞானங்கள் துறை *(16.08.2021 வரை)*
திரு. எம்.எம். றிபாவுதீன்	நூலகர்
கலாநிதி ஏ. ஹலீம்	கணக்கியல் நிதித் துறை *(01.07.2021 முதல்)*
கலாநிதி. திருமதி. எஸ். சபீனா. எம்.ஜி. ஹஸன்	முகாமைத்துவ துறை *(01.07.2021 வரை)*
பேராசிரியர். எம்.ஏ.எம். பௌசர்	அரசியல் விஞ்ஞானங்கள் துறை
பொறியியலாளர். எம்.ஐ. இல்ஹாம் ஜஸீல்	துறைசார் கற்கைகள் பிரிவு
கலாநிதி. திருமதி. எம்.ஏ.எஸ்.எப். ஸாதியா	மொழிகள் துறை
கலாநிதி. ஏ.எம்.எம். நவாஸ்	ஆங்கில மொழி கற்பித்தல் துறை
கலாநிதி. எம்.எச். ஹாரூன்	இரசாயனவியல் துறை
கலாநிதி. ஏ.ஏ.எம். நுபைல்	பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
கலாநிதி. எஸ். அனுஸியா	சமூக விஞ்ஞானங்கள் துறை
கலாநிதி. (திருமதி.) வீ. சுஜாராஜினி	உயிரியல் விஞ்ஞானங்கள் துறை
திரு. எம்.எச்.எம். றினோஸ்	புவியியல் துறை
கலாநிதி. எஸ்.எம். ஐயூப்	சமூகவியல் துறை
திரு. ஏ.எல். ஹனீஸ்	கணித விஞ்ஞானங்கள் துறை
கலாநிதி. பீ.எம்.கே. அலஹகோன்	இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் துறை
கலாநிதி. (திருமதி). ஏ.எம்.என்.எம். அதிகாரம்	பௌதீகவியல் துறை
கலாநிதி. டபுள்யூ.ஜீ.சீ.டபுள்யூ.குமார	கணனி விஞ்ஞான பொறியியல் துறை
கலாநிதி. யூ. பாருக்	இயந்திரவியல் பொறியியல் துறை
திரு. கே. முஹம்மட் ரிப்தி	தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை
பொறியியளாளர் எம்.சி. றியாஸ்	குடிசார் பொறியியல் துறை
திருமதி. எம்.சி.எஸ். சாதீபா	அரபுமொழி துறை
கலாநிதி. ஏ.என்.எம். முபாரக்	உயிர்முறைமைகள் தொழிநுட்ப துறை *(01.02.2021 முதல்)*
கலாநிதி. எம்.எம். முனீப்	உயிர்முறைமைகள் தொழிநுட்ப துறை

	(31.01.2021 வரை)
கலாநிதி. ஆர்.ஏ. சர்ஜூன்	இஸ்லாமிய கற்கைகள் துறை
கலாநிதி. எச்.எம்.எம்.நளீர்	கணனி விஞ்ஞான பொறியியல் துறை
திரு. சி.எம்.எம். மன்சூர்	தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள்

பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்

திரு. எம்.ஏ.ஏ.எம். பஹாம்	
திரு. ஏ.எம்.றியாஸ் அஹமட்	*(19.08.2021 முதல்)*
கலாநிதி. ஏ.எம். றஸ்மி	*(06.08.2021 வரை)*

கலை கலாசார பீடம்

திரு. ஏ. விக்ரமரட்ன
திரு. எம்.ஏ.எம். சமீம்

இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்

கலாநிதி. ஆர்.ஏ. சர்ஜூன்	*(09.01.2021 முதல்)*
கலாநிதி. எஸ்.எம்.எம். நாசர்	*(03.02.2021 முதல்)*
கலாநிதி. எஸ்.எம்.எம். நபீஸ்	*(03.02.2021 முதல்)*

முகாமைத்துவ வர்த்தக பீடம்

கலாநிதி. ஏ. ஹலீம்	*(12.12.2021 வரை)*
கலாநிதி. எம்.சி.ஏ. நாசர்	*(15.07.2021 வரை)*
கலாநிதி. எம்.எச். தௌபீக்	*(19.07.2021 முதல்)*
கலாநிதி. ஐ. றைஸால்	*(13.12.2021 முதல்)*

பொறியியல் பீடம்

பொறியியலாளர். ஏ.எல்.எம். றிஸாத்
கலாநிதி. ஜே.ஏ.எஸ்.பீ. ஜயகொடி


தொழிநுட்ப பீடம்

திரு.ஆர்.கே.ஏ. றிபாய் காரியப்பர்	
கலாநிதி. ஏ.என்.எம். முபாறக்	*(08.03.2021 வரை)*
கலாநிதி. ஏ.டி.என்.டி. குமார	*(09.03.2021 முதல்))*

செயலாளர்

திரு. எச். அப்துல் சத்தார், பதிவாளர்

நிருவன கட்டமைப்பு
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்



SSSW- மாணவர் உதவி மற்றும் நலன்புரி சேவைகள் பிரிவு
OSPIM- மூலோபாய திட்டமிடல் மறறும் செயற்படுத்தல் கண்காணிப்பு அலுவலகம்
RIC- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையம்
CEDPL- வெளிவாரிப் பட்டப் படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
CGU- தொழில் வழிகாட்டல் பிரிவு
SDC- ஊழியர் அபிவிருத்தி நிலையம்
CGEE – பாலின சமநிலை மற்றும் சமத்துவத்திற்கான மையம்
UBL Cell- பல்கலைக்கழக வணிக இணைப்பு பிரிவு
MIT- முகாமைத்துவ தகவல் தொழிநுட்பம்
CQA- தர உத்தரவாத மையம்

DR- பதில் பதிவாளர்
DB- பதில் நிதியாளர்
SAB- சிரேஷ்ட உதவி நிதியாளர்
SAR- சிரேஷ்ட உதவி பதிவாளர்
SAIA- சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்
W/E- வேலைப் பொறியியலாளர்
AR- உதவி பதிவாளர்
AB- உதவி நிதியாளர்
AIA – உதவி உள்ளக கணக்காய்வாளர்
CSO - தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர்

SALB- சிரேஷ்ட உதவி நூலகர்
ALB- உதவி நூலகர்
AS- உதவி புள்ளிவிபரவியலாளர்

1. பல்கலைக்கழக செயற்பாடுகள் தொடர்பிலான மீளாய்வு

1.1 சுருக்கமான அறிமுகம்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (இ.தெ.கி.ப.க) 1995ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் பிரதான வளாகமானது, 178.98 ஏக்கர் (2011 இலான நில அளவை மதிப்பீட்டின்படி) பசுமையான நிலப்பரப்பில், ஒலுவில் கடற்கரையோரத்தின் வழியே அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பகுதியில் (ஒலுவில் வளாகத்தில்) தொடர்ச்சியான மண் அரிப்பு இருப்பதால், இதுவரையில் பல்கலைக்கழகம் சுமார் 25.45 ஏக்கர் நிலப்பரப்பினை இழந்துள்ளது. பிரயோக விஞ்ஞானங்கள் பீடமானது 6.72 ஏக்கர் நிலப்பரப்பில் (2011 இலான நில அளவை மதிப்பீட்டின்படி) சம்மாந்துறையில் அமையப்பெற்றுள்ளது. தொழிநுட்ப பீடத்தின் கீழ் வருகின்ற மல்வத்தை பண்ணையானது (35.25 ஏக்கர் நிலப்பரப்பில், 2011 இலான மதிப்பீட்டின்படி) விவசாய தொழிநுட்பத்தில் செயன்முறை வகுப்புகள் நடாத்துவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகமானது உயர் கல்வித் துறையில் ஒரு மிகப்பெரிய முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள தனியார் அமைப்புகள் மற்றும் அரச துறைகளால் வேண்டப்படுகின்ற தொழில்சார் தகைமையுள்ள பட்டதாரிகளை உருவாக்கத்தக்க முதற்தரமான கல்விசார் கொள்கைகளைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் அதனுடன் அக்கறையுடையோர் மற்றும் சமுதாயத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் பல்வேறுபட்ட நெறிமுறைகளை வளர்க்கத்தக்க ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. அத்தோடு, இப்பிராந்தியத்தின் சமாதானத்திற்கும் இன நல்லிணக்கத்திற்கும் பாரிய பங்களிப்பை இப்பல்கலைக்கழகம் ஆற்றி வருகின்றது. தற்போது இப்பல்கலைக்கழகம் ஆறு பீடங்களையும் 5,843 பட்டப்படிப்பு உள்வாரி மாணவர்களையும், 447 பட்டமேற்படிப்பு பட்டதாரி மாணவர்களையும் கொண்டுள்ளது. 199 கல்விசார் ஊழியர்கள் உள்ளடங்களாக பல்கலைக்கழகத்தில் 666 நிரந்தர ஊழியர்கள் உள்ளனர்.

தனது பெயரை சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாகத் திகழச்செய்வதில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் சிறந்த கல்விசார் திறனோடு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது.

1.2 தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது கலை கலாசார பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம், இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் ஆகிய ஆறு பீடங்களைக் கொண்டுள்ளது. இலங்கைத் தென்கிழக்குப் பல்லைக்கழகம் இளமானி, முதுமானி பட்டப்படிப்புகள், டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் என்பவற்றை நடாத்துகின்றது.

பல்கலைக்கழகமானது உள்ளூர் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதில் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகிறது. கல்விசார் துறைகள் மற்றும் பீடங்களால் வழங்கப்படும் கற்கைகள் பின்வரும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 1.1: கல்விசார் துறைகள் மற்றும் பிரிவுகளின் விபரங்கள்

கலை கலாசார பீடம்
சமூக விஞ்ஞானங்கள் துறை
மொழிகள் துறை
அரசியல் விஞ்ஞானங்கள் துறை
சமூகவியல் துறை
பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
புவியியல் விஞ்ஞானங்கள் துறை
ஆங்கில மொழி கற்பித்தல் துறை
தகவல் தொழிநுட்ப துறை
பட்டமேற்படிப்பு பிரிவு

முகாமைத்துவ வர்த்தக பீடம்
கணக்கியல் நிதித் துறை
முகாமைத்துவ துறை
முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பமும் துறை
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை
பட்டமேற்படிப்பு பிரிவு
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
உயிரியல் விஞ்ஞானங்கள் துறை
கணிதவியல் விஞ்ஞானங்கள் துறை
பௌதீகவியல் விஞ்ஞானங்கள் துறை
இரசாயனவியல் விஞ்ஞானங்கள் துறை
கணினி விஞ்ஞானங்கள் துறை
இஸ்லாமியக் கற்கைகள் அரபுமொழி பீடம்
இஸ்லாமியக் கற்கைகள் துறை
அரபுமொழித் துறை
துறைசார் கற்கை பிரிவு
பொறியியல் பீடம்
குடிசார் பொறியியல் துறை
இயந்திரப் பொறியியல் துறை
மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறை
கணனி விஞ்ஞான பொறியியல் துறை
துறைசார் கற்கைகளுக்கான துறை
தொழிநுட்ப பீடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை
உயிர்முறைமைகள் தொழிநுட்ப துறை

அட்டவணை 1.2: பீடங்களால் வழங்கப்படும் கற்கைகள் (உள்வாரி)

இளமானி பட்டப்படிப்பு கற்கைகள்	SLQF Level	பொது/ விசேடம்	கால அளவு	மொழி மூலம்
கலை கலாசார பீடம்				
கலைகள் இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
அரசியல் விஞ்ஞானத்தில் கலைகள் இளமானி கௌரவப் பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
பொருளியலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்/ ஆங்கிலம்
மெய்யியலும் உளவியல் ஆற்றுப்படுத்தலிலும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
சமூகவியலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்/ ஆங்கிலம்
புவியியலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்/ ஆங்கிலம்
தமிழில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
இந்து நாகரீகத்தில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
மும்மொழிக் கற்கைகளில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		மும்மொழி
முகாமைத்துவ வர்த்தக பீடம்				
வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
வர்த்தக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பமும் விஞ்ஞான இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	
கணக்கியலில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
நிதியியலில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
தகவல் முறைமையில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		

இளமானி பட்டப்படிப்பு கற்கைகள்	SLQF Level	பொது / விசேட	கால அளவு	மொழி மூலம்
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்				
உயிரியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	ஆங்கிலம்
பிரயோக உயிரியலில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
தாவரவியலில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
பிரயோக புள்ளிவிபரவியலில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
இரசாயனவியலில் விஞ்ஞான இளமானி கௌரவப் பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
பௌதீகவியலில் விஞ்ஞான இளமானிப்பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
கணிதத்தில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
பிரயோக விஞ்ஞானங்களில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
இஸ்லாமியக் கற்கைகள் அரபுமொழி பீடம்				
கலைகள் இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
இஸ்லாமிய சிந்தனையும் நாகரீகமும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	தமிழ்
இஸ்லாமிய வங்கியியலும் நிதியும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
இஸ்லாமிய சட்டமும் சட்டவாக்கமும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
அரபு மொழியும் இலக்கியமும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		அரபு மற்றும் தமிழ்
மொழியியலும் மொழிபெயர்ப்பிலும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		அரபு, ஆங்கிலம் மற்றும் தமிழ்
மும்மொழிக் கற்கைகளில் கலைகள் இளமானி கௌரவ பட்டம் (கலை கலாசார பீடத்துடனான இணைந்த கற்கை நெறி)	6	விசேடம்		ஆங்கிலம்
பொறியியல் பீடம்				
பொறியியல் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம் (குடிசார் பொறியியல்)	7	விசேடம்	4 வருடங்கள்	ஆங்கிலம்
பொறியியல் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம் (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்)				
பொறியியல் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம் (இயந்திரவியல் பொறியியல்)				
தொழிநுட்ப பீடம்				
விவசாய தொழிநுட்பத்தில் உயிர்முறைமைகள் தொழிநுட்ப இளமானி பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	ஆங்கிலம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப இளமானி பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்

அட்டவணை 1.3: சான்றிதழ் கற்கைகள் மற்றும் டிப்ளோமா கற்கைகள் (வெளிவாரி)

சான்றிதழ் கற்கைகள்			
கற்கைநெறியின் பெயர்	**SLQF Level**	**கால அளவு**	**மொழி மூலம்**
ஆங்கில மொழி சான்றிதழ் கற்கை	-	06 மாதங்கள்	ஆங்கிலம்
டிப்ளோமா பாடநெறிகள் (பட்டப் பின்படிப்பு அல்லாத)			
கற்கைநெறியின் பெயர்	**SLQF Level**	**கால அளவு**	**மொழி மூலம்**
ஆற்றுப்படுத்தலில் தொழில்சார் டிப்ளோமா கற்கை	3	18 மாதங்கள்	தமிழ்
ஆங்கில மொழி டிப்ளோமா கற்கை	1	1 வருடங்கள்	ஆங்கிலம்
இதழியல் டிப்ளோமா கற்கை	3	1 வருடங்கள்	தமிழ்

அட்டவணை 1.4: இளமானி பட்டப்படிப்பு கற்கைகள் (வெளிவாரி)

இளமானி கற்கை நெறிகள் (வெளிவாரி)				
கற்கைநெறியின் பெயர்	**SLQF Level**	**விசேடம் / பொது**	**கால அளவு**	**மொழி மூலம்**
கலை கலாசார பீடம்				
கலைகள் இளமானி	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
முகாமைத்துவ வர்த்தக பீடம்				
வியாபார நிர்வாக இளமானி	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
வர்த்தக இளமானி	5	பொது	3 வருடங்கள்	

1.3 பட்டப்பின்படிப்பு கற்கைகள்

கலை கலாசார பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் ஆகிய பீடங்கள் பட்டப்பின்படிப்பு கற்கைகளை வழங்குகின்றன (அட்டவணை 1.5). பல்கலைக்கழகமானது 2021ம் ஆண்டில் 01 முதுதத்துவமானி (தமிழில் முதுதத்துவமானி), 16 வியாபார நிர்வாக முதுமானி மற்றும் 02 முதுகலை டிப்ளோமா (தமிழில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா) பெற்றவர்களை உருவாக்கியுள்ளது.

அட்டவணை 1.5: பட்டப்பின்படிப்பு கற்கைகள்

பீடங்கள்	பட்டப்பின்படிப்பு கற்கைகள்	SLQF Level	முழு நேரம் /பகுதி நேரம்	கால அளவு	மொழி மூலம்
கலை கலாசார பீடம்					
தமிழில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா		8	பகுதி	01 வருடங்கள்	தமிழ்
தமிழில் முதுமானி		10	பகுதி	02 வருடங்கள்	
தமிழில் முதுதத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	
புவியியலில் முதுதத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
தத்துவவியலில் முதுதத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	
அரசறிவியல் விஞ்ஞானத்தில் முதுதத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	
சமூகவியலில் முதுதத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	
தமிழில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்
புவியியலில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
தத்துவவியலில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	
அரசறிவியல் விஞ்ஞானத்தில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	
சமூகவியலில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	
முகாமைத்துவ வர்த்தக பீடம்					
முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா		8	முழு	01 வருடங்கள்	ஆங்கிலம்
வியாபார நிர்வாக முதுமானி		10	முழு	02 வருடங்கள்	
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்					
பிரயோக புள்ளிவிபரவியலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா		8	பகுதி	01 வருடங்கள்	ஆங்கிலம்
பௌதீகவியல் மற்றும் புவியியல் விஞ்ஞானத்தில் முதுதத்துவமானி		11	முழு நேரம் பகுதி நேரம்	24 மாதங்கள் 36 மாதங்கள்	
கணணி விஞ்ஞானத்தில் முதுதத்துவமானி					
தாவரவியல் மற்றும் விலங்கியலில் முதுதத்துவமானி					
இரசாயனவியவில் முதுதத்துவமானி					
கணிதம் மற்றும் பிரயோக புள்ளிவிபரவியலில் முதுதத்துவமானி					
பௌதீகவியல் மற்றும் புவியியல் விஞ்ஞானத்தில் முதுமானி		12	முழு நேரம் பகுதி நேரம்	36 மாதங்கள் 54 மாதங்கள்	
கணணி விஞ்ஞானத்தில் முதுமானி					
தாவரவியல் மற்றும் விலங்கியலில் முதுமானி					
இரசாயனவியவில் முதுமானி					
கணிதம் மற்றும் பிரயோக புள்ளிவிபரவியலில் முதுமானி					
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடம்					
ஆராய்ச்சி மூலமான இஸ்லாமிய ஆய்வுகளில் முதுதத்துவமானி		11	முழு	24 மாதங்கள்	தமிழ்
ஆராய்ச்சி மூலமான இஸ்லாமிய ஆய்வுகளில் முதுமானி		12	முழு	36 மாதங்கள்	தமிழ்
தொழிநுட்ப பீடம்					
உயிர்முறைமைகள் தொழிநுட்பத்தில் முதுதத்துவமானி		11	முழு/பகுதி	3 வருடங்கள்/ 2 வருடங்கள்	ஆங்கிலம்

1.4 உலக தரப்படுத்தல்

இணையத்தள அளவீட்டில் (வெபோமெற்றிக்) இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் 2022 ஜனவரியில் 7941ம் இடத்திலுள்ளது. சிறந்த சேவைகளை வழங்க கடினமாக முயற்சி செய்கின்ற கல்வி நிறுவனங்களின் போட்டிமிக்க உலகில், பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்படுத்தலில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மேலும் முன்னிலைப்படுத்துவதற்குத் தேவையான அளவீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.


1.5 மாணவர் பரம்பல்

டிசம்பர் 2021 இன்படி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5843ஆகும். அட்டவணை 1.6 ஆனது ஒவ்வொரு பீடத்திற்கும் இடையில் மாணவர்களின் விகிதாசார பரம்பலைக் காட்டுகிறது.

அட்டவணை 1.6: 31 திசெம்பர் 2021 இன்போதான பீட ரீதியான மாணவர் பரம்பல்

பீடம்	மாணவர்களின் எண்ணிக்கை	சதவீதம் (%)
கலை கலாசார பீடம்	1258	22
முகாமைத்துவ வர்த்தக பீடம்	1401	24
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	742	13
இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம்	1308	22
பொறியியல் பீடம்	479	8
தொழிநுட்ப பீடம்	655	11


விளக்கப்படம் 1.1 பீடங்கள் மற்றும் வருட ரீதியாக மாணவர் எண்ணிக்கையைக் காட்டுகிறது.



விளக்கப்படம் 1.1: மாணவர் பரம்பல்

1.6 ஊழியர் பரம்பல்


டிசம்பர் 2021 இன்படி பல்கலைக்கழகத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை (நிரந்தர ஊழியர்கள்) 666 ஆகும். விளக்கப்படம் 1.2, ஊழியர் பிரிவின் விகிதாசார பரம்பலைக் காட்டுகிறது.




விளக்கப்படம் 1.2 : டிசம்பர் 2021 இன்போதான ஊழியர்களின் பரம்பல்

1.7 கல்விசார் பதவியணியினர் பரம்பல்

விளக்கப்படங்கள் 1.3 மற்றும் 1.4 முறையே பதவி மற்றும் கல்வி நிலை ஆகியவற்றின் அடிப்படையில் கல்விசார் ஊழியர்களின் (நூலக ஊழியர்கள் நீங்கலாக) பரம்பலைக் காட்டுகிறது.



விளக்கப்படம் 1.3: (31 டிசம்பர் 2021 இன் போதான பதவி அடிப்படையிலான கல்விசார் ஊழியர்களின் பரம்பல் (நூலக ஊழியர்கள் நீங்கலாக)



விளக்கப்படம் 1.4: 31 டிசம்பர் 2021 இன் போதான கல்வித் தகைமை அடிப்படையிலான கல்விசார் பதவியணியினரின் பரம்பல் (நூலக ஊழியர்கள் நீங்கலாக)

1.8 இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகங்கள்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகங்களானது பிரதான நூலகம், பிரயோக விஞ்ஞானங்கள் பீட நூலகம் மற்றும் பல்கலைக்கழக கலாசார அருங்காட்சியகம் ஆகியவற்றை உள்ளடக்கியதான நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்களின் வலையமைப்பாகும். இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் மூலோபாய திட்டத்திற்கிணங்க செயற்படுவதுடன் தர உத்தரவாதத்திற்கான சர்வதேச சிறந்த நடைமுறையைக் குறிக்கிறது. 2021 இல் நூலகத்தின் முக்கிய சாதனைகளாவன:

i) ***பல்கலைக்கழக காப்பகங்கள்:.***

இ.தெ.கி.ப.க இன் ஸ்தாபகர் தினம் 2021 மற்றும் வெள்ளி விழாவைக் குறிக்கும் வகையில் 23.10.2021 அன்று இ.தெ.கி.ப.க இன் பிரதான நூலகத்தில் பல்கலைக்கழகம் தொடர்பான அரிய பொருட்கள் மற்றும் அறிவுசார் ஆவணங்களை பாதுகாத்துப் பரப்பும் நோக்கில் பல்கலைக்கழக ஆவணக் காப்பகத்தை நிறுவியது.

ii) ***இணைப்புகளை வலுப்படுத்தல் :***

பீடங்கள் மற்றும் மாணவர்களுடனான ஈடுபாட்டை வலுப்படுத்துதல் அத்துடன் பல ஆராய்ச்சி திறன் மேம்பாட்டுத் திட்டம், ஆய்வுத்திருட்டு கண்டறிதல் சேவைகள், இலக்கியத் தேடல் மற்றும் ஆவண விநியோக

சேவைகளை நடாத்துவதன் மூலம் ஆராய்ச்சியில் நூலகக் கல்வியாளர்களின் அதிக ஈடுபாட்டை ஊக்குவித்தல்.

iii) ***Dspace மேம்பாடு :***

பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்களை நினைவுகூரும் வகையில், Dspace இன் சமீபத்திய மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் நூலக மென்பொருள் பதிப்பு – 6.3, 23.10.2021 அன்று தொடங்கப்பட்டது.

iv) ***ILMS மேம்பாடு :***

பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்களை நினைவுகூரும் வகையில், KOHA ILMS இன் சமீபத்திய மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவ முறைமை மென்பொருள் பதிப்பு - 21.05, அக்டோபர் 23, 2021 அன்று தொடங்கப்பட்டது.

v) சமூக நல நிகழ்ச்சித்திட்டம்:

இ.தெ.கி.ப.க நூலகங்கள், அவுஸ்திரேலியாவின் YM அறக்கட்டளையுடன் இணைந்து, இப்பகுதியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நூலகங்களுக்குப் பயனர் சமூகத்தின் நலனுக்கான சேகரிப்பை வலுப்படுத்தும் நோக்கில் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியது. இது இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் தினம் மற்றும் வெள்ளி விழாவைக் குறிக்கும் வகையில் தென்கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள நூலகங்களை மேம்படுத்துவதற்காக நடாத்தப்படும் இ.தெ.கி.ப.க. நூலகங்களின் சமூக நல திட்டமாகும். இந்த நிகழ்ச்சி 23.10.2021 அன்று இ.தெ.கி.ப.க. இன் ஸ்தாபகர் தினம் 2021 மற்றும் வெள்ளி விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நடைபெற்றது.

vi) கருத்தரங்கு அறை

நவம்பர் 3, 2021 அன்று, உபவேந்தர் பேராசிரியர். ஏ. ரமீஸ், பிரதான நூலகத்தில் கருத்தரங்கு அறையினைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வின் நினைவாக, ”வளர்ந்து வரும் சவால்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட இயங்கலை பயனர் சேவைகளுக்கான வாய்ப்புகளை நிவர்த்தி செய்வதில் பல்கலைக்கழக நூலகங்களின் புதிய வகிபாங்கு” என்ற தலைப்பில் Zoom விரிவுரை ஏற்பாடு செய்யப்பட்டது.

vii) சிறப்புமிக்க விரிவுரைத் தொடர்:

இ.தெ.கி.ப.க. நூலகங்கள், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழாவைக் குறிக்கும் வகையில், சிறப்புமிக்க விரிவுரைகள் தொடரை ஏற்பாடு செய்தன.

01. இ.தெ.கி.ப.க. நூலகங்கள் அதன் தொடக்க விரிவுரைத் தொடரை 18 மார்ச் 2021 அன்று Zoom வழியாக நடாத்தியது. பீடாதிபதி பேராசிரியர். (கலாநிதி.) ஸ்வப்னா பானர்ஜி, கல்வி, இதழியல் மற்றும் நூலக அறிவியல் பீடம், கல்கத்தா பல்கலைக்கழகம், கல்கத்தா இந்தியா, முதன்மைப் பேச்சாளராகப் பங்கேற்று, '' LIS கோட்பாடு மற்றும் நடைமுறைகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்'' என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார்.

02. ''வளர்ந்து வரும் சவால்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட இயங்கலை பயனர் சேவைகளுக்கான வாய்ப்புகளை நிவர்த்தி செய்வதில் பல்கலைக்கழக நூலகங்களின் புதிய வகிபாங்கு'' என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது விரிவுரை 3 நவம்பர் 2021 அன்று Zoom வழியாக நடைபெற்றது. முதன்மைப் பேச்சாளராக பேராசிரியர் (கலாநிதி) சுஸ்மிதா சக்ரவர்த்தி, துறைத் தலைவர், நூலக தகவல் முறைமை துறை, கல்கத்தா பல்கலைக்கழகம், கல்கத்தா, இந்தியா அவர்கள் கலந்துகொண்டாரகள்.

viii) *தொழில்முறை மேம்பாடு மற்றும் பயிற்சித் தொடர்*

இ.தெ.கி.ப.க. இன் வெள்ளி விழா ஆண்டில், இ.தெ.கி.ப.க. நூலகங்கள், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறையில் தமிழ் பேசும் நூலகர்களுக்கு கல்வி மற்றும் அறிவை மேம்படுத்தும் நோக்கத்திற்காக தொழில்முறை மேம்பாடு மற்றும் பயிற்சித் தொடரை ஏற்பாடு செய்தன.

01. "Machine Readable Cataloguing for Tamil Bibliographic Records" என்ற தலைப்பில் முதலாவது நிகழ்ச்சி 2021 பெப்ரவரி 22 ஆம் திகதி நிகழ்நிலையில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகர் திரு. எஸ். கேதீஸ்வரன் வளவாளராகப் பணியாற்றினார்.

02. ”கல்வி நூலகங்களில் அரபு மற்றும் இஸ்லாமிய அறிவு ஒழுங்கமைப்பு” என்ற தலைப்பில் இரண்டாவது நிகழ்ச்சி மார்ச் 4, 2021 அன்று நடைபெற்றது. பஹ்ரைனில் உள்ள கிங்டம் பல்கலைக்கழக நூலகத்தின் தலைவர் திரு. அஷ்-ஷேக் எஸ்.எம். அசாஹிம் வளவாளராகப் பணியாற்றினார்.

ix) ***புத்தக பட்டியல் தொகுப்பு குறித்த பயிற்சி அமர்வு***

2021 பெப்ரவரி 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் நூலகக் கல்வியாளர்கள் மற்றும் துணைத் தொழில் வல்லுநர்களுக்கான நூலக நூலியல் தரவுத்தளத்தைத் திருத்துவதற்கான அறிவு மற்றும் பயிற்சி அமர்வு நடாத்தப்பட்டது.

x) ***புத்தக கண்காட்சி :*** இ.தெ.கி.ப.க. நூலகங்கள், 23/10/2021 அன்று இ.தெ.கி.ப.க. இன் வெள்ளி விழா ஆண்டில், பல்கலைக்கழக ஆவணக் காப்பகங்களின் தொடக்க விழாவைக் குறிக்கும் வகையில், ‘‘ஒரே மக்கள், ஒரே தேசம் மற்றும் ஒரே இலங்கை’’ என்ற கருப்பொருளின் கீழ் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது.

xi) ***நிறுவன களஞ்சிய மேம்பாடு :*** டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை நிர்வகிப்பதுடன் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அறிவுசார் மூலதனத்தை நிறுவன களஞ்சியத்தில் (DSpace) காப்பகப்படுத்துகிறது, இது அறிவார்ந்த பரவலை எளிதாக்குவதுடன் நிறுவனப் புலமையின் முழு விரிவையும் வெளிப்படுத்துகிறது. அத்தோடு பல்கலைக்கழகத்தின் வெபோமெட்ரிக்ஸ் தரவரிசையை மேம்படுத்துகிறது. 2021 இல் பதிப்பு 5.5 இலிருந்து பதிப்பு 6.3 இற்கு மேம்படுத்தப்பட்டது. மின் களஞ்சியத்தில் 31 டிசம்பர் 2021 இன் 4476 அறிவுசார் கட்டுரைகள் காப்பகப்படுத்தப்பட்டுள்ளன. அதில் 252 கட்டுரைகள் 2021 இல் பதிவேற்றப்பட்டன. வெளி நாடுகள் உட்பட 64198 பார்வைகள் புலமைக் கட்டுரைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

xii) ***மதியுரை:*** பீட ஆய்விதழ்கள், மாநாட்டுப் புத்தகங்கள் (Proceedings) மற்றும் பல்கலைக்கழக வெளியீடுகளை வெளியிடுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு மதியுரை ஆலோசனைகள் மற்றும் எழுத்தாக்க உதவிகளை வழங்குகிறது.

xiii) ***கற்பித்தல் மற்றும் மதிப்பீடு :***

அ. இ.தெ.கி.ப.க நூலகங்களின் அனைத்து கல்வியாளர்களும் இளமானி பட்டதாரிகளுக்கு விரிவுரைகளை வழங்குவதிலும், "தகவல் கல்வியறிவு திட்டங்கள்" குறித்த விருப்பு பாடங்களை மதிப்பீடு செய்வதிலும் பங்கு பற்றினர்.

ஆ. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உயிர்முறைமை தொழிநுட்ப இளங்கலை 3ஆம் ஆண்டு மாணவர்களுக்கு AEE 31012 ஆராய்ச்சி முறைகள் குறித்த விரிவுரைகள் நடாத்தப்பட்டது.

இ பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூர மற்றும் தொடர்கல்வி நிலையத்தால் நடாத்தப்பட்ட ''நூலகம் மற்றும் தகவல் சேவைகளுக்கான டிப்ளோமா'' விரிவுரைகளை நடாத்தினார்.

xiv) வளாகத்திற்கு வெளியேயான நூலகச் சேவைகள் :

கோவிட் 19 பரவல் காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும் போது, எமது பயனாளர்களுக்கு நூலகக் கற்றல் வளங்களை தொலைதூரத்தில் அணுக உதவும் வகையில், வளாகத்திற்கு வெளியே நூலகச் சேவைகளை வழங்க, மாணவர்கள் உட்பட முக்கிய பல்கலைக்கழக அக்கரையுடையோருடன் கூட்டாகவும் ஆக்க பூர்வமாகவும் பணியாற்றியமை.

xv) ***இலத்திரனியல் தரவுத்தளம் :***

கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் ஷிபோலெத் (SHIBBOLETH) அணுகலைப் பயன்படுத்தி எமரால்ட் (EMERALD), டெய்லர் மற்றும் பிரான்சீஸ் (TAYLOR & FRANCIS) மற்றும் OXFORD போன்ற இலத்திரனியல் தரவுத்தளங்களுக்கு தொலை நிலை அணுகலை வழங்கியது. டெய்லர் & பிரான்சிஸ் பயன்பாட்டு புள்ளிவிபரங்கள் 1637 ஆகவும், எமரால்டு 3206 ஆகவும் மற்றும் OXFORD 220 ஆகவும் மற்றும் 2021ஆம் ஆண்டில் மொத்தமாக 5063 முழு ஆய்வுக்கட்டுரைகள் எங்கள் பயனாளர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

xvi) ***புதிதாக திரட்டப்பட்டவை :*** அனைத்து பீடங்களின் பயனாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டில் நூலகமானது ரூபா. 104,733.00 மதிப்பில் 354 அச்சிடப்பட்ட புத்தகங்களை மட்டுமே கொள்வனவு செய்துள்ளது.

xvii) ***வடிவங்கள் மற்றும் புதிய பதிவு :*** 31 டிசம்பர் 2021 இன்போது 3,485 பதிவுசெய்யப்பட்ட பயனாளர்கள் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் 1,644 புதிய மாணவர்கள் மீளாய்வாண்டில் நூலக உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

xviii) ***புத்தக சுழற்சிகள் :*** தொற்றுநோய் சூழ்நிலையால் புத்தக சுழற்சிகள் கணிசமாக பாதிக்கப்பட்டன. நூலக முகாமைத்துவ முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, நூலகங்கள், மொத்தமாக 5438 உள்வருகைகள் மற்றும் 5502 வெளிச் செல்லுகைகளைக் கொண்டிருந்தன. (மொத்தமாக 10,940 உள்வருகைகள், வெளிச் செல்லுகைகள்)

xix) ***அபராதங்கள் :*** 2021ஆம் ஆண்டின் காலாவதியானமைக்கான அபராதமாக மாணவர்களிடமிருந்து ரூபா. 18,050.00 பிரதான நூலகம் மூலமும், ரூபா. 670.00 விஞ்ஞான நூலகம் மூலமும் பெறப்பட்டது.

xx) ***ஆவண விநியோக சேவைகள் :*** இ.தெ.கி.ப.க. நூலகங்கள் இலத்திரனியல் புத்தக விநியோக சேவைகளை வழங்குகின்றன. 2021 இல் 321 கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள், 211 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

xxi) "Turnitin" தொடக்க கருத்தரங்குகள்:

"Turnitin" எழுத்துப் பொருத்தத்திற்கான மென்பொருளை அறிமுகம் செய்து விளக்குவதற்கான தொடக்கக் கருத்தரங்குகள் நூலகத்தால் பீட வாரியாக நடாத்தப்பட்டன.

xxii) "Turnitin" குறித்த இயங்கலை பயிற்சி அமர்வு

Turnitin feedback studio குறித்த இயங்கலை பயிற்சி அமர்வு 28/04/2021 அன்று நடைபெற்றது. வளவாளராக திருமதி. பூர்ணா போஸ் கலந்து கொண்டார். இ.தெ.கி.ப.க. நூலகர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்கள் பயிற்சி அமர்வில் கலந்து கொண்டனர்.

1.9 அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- ‘‘வரலாறு பாடநெறியில் கௌரவ கலை இளமானி’’ எனும் புதிய பட்டப்படிப்பினைத் தொடங்குவதற்கான முன்மொழிவு ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- 03.03.2021 ஆம் திகதிய 2217/25 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கலைப் பீடத்தின் கணனிப் பிரிவு 03.03.2021 அன்று தகவல் தொழிநுட்பத் துறையாக தரமுயர்த்தப்பட்டது.

- CEDPL இனூடாக இளங்கலை வெளிவாரி பட்டப்படிப்பை நடாத்துவதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு, ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது.

- CEDPL இன் திட்ட மீளாய்வுக்காக (கலை இளமானி வெளிவாரி பட்டப்படிப்பு திட்டம்) SER சமர்ப்பிக்கப்பட்டது.


- தமிழ்/ புவியியல்/ தத்துவவியல்/ அரசறிவியல் விஞ்ஞானம்/சமூகவியல் ஆகிய துறைகளில் முதுதத்துவமானி/ கலாநிதி ஆராய்ச்சி திட்டங்கள் தொடங்கப்பட்டன.

- இ.தெ.கி.ப.க ஆனது 2021 UI GreenMetric உலக பல்கலைக்கழக தரவரிசையில் உலகின் மிகவும் நிலைப்பேறான பல்கலைக்கழகங்களுக்கிடையே 317வது இடத்தைப் பெற்றுள்ளது மேலும் இலங்கைப் பல்கலைக்கழகங்களிடையே 4வது இடத்தைப் பெற்றுள்ளது.

- கோவிட்-19 தொற்று நோய்க் காலகட்டத்தில் இயங்கலையிலும் நேரடியாகவும் இறுதி அரையாண்டு தேர்வுகள் மற்றும் கல்வித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.


- 2019/2020 கல்வியாண்டிற்கான புதிய தொகுதி மாணவர்களைப் பதிவு செய்து, கல்வித் திட்டங்கள் இயங்கலையில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- உயர் கல்விக்கான மாணவர் எண்ணிக்கையினை அதிகரித்தல் எனும் தேசிய கொள்கைக்கு அமைய மாணவர் சேர்க்கையினை விரிவாக்க பல்கலைக்கழகத்திற்கு முடிந்தது (விளக்கப்படம் 1.5).



விளக்கப்படம் 1.5: இறுதி ஐந்து கற்கை ஆண்டுடிற்கான மாணவர் உட்சேர்க்கை விபரம்

- விடுதி வசதிகள் கணிசமான அளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் தகுதியான அனைத்து மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகள் வழங்கப்படுகிறது. கோவிட் 19 காரணமாக விரிவுரைகள் இயங்கலை மூலமாக மேற்கொள்ளப்படுவதனால் 2021ஆம் ஆண்டில் விடுதி வசதிகள் வழங்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கணிசமாகக் குறைத்துள்ளது.



விளக்கப் படம் 1.6: விடுதி வசதிகள் வழங்கப்பட்டவர்கள்: 2015 - 2020

- பல்கலைக்கழகத்தால் ஆறு சர்வதேச மற்றும் உள்ளூர் ஆராய்ச்சி மாநாடுகளை நடாத்த முடிந்தது.

- 2021 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகமானது மொத்தமாக 126 ஆய்வுக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச அளவில் குறியிடப்பட்டதும் பரிந்துரைக்கப்பட்டதுமான ஆய்வுகளை வெளியிட்டுள்ளது.

- 2021 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் மொத்த வெளியீடுகளின் எண்ணிக்கை 418 ஆகும்.

- இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது 2019ம் ஆண்டு "உயர்தர ஆய்விதழ்களில் வெளியிடப்படும் ஆய்வுக்கட்டுரைகளுக்கான முதவை கௌரவங்கள்" என அழைக்கப்படும் ஒரு கௌரவ விருதினை, ஊழியர்களை உயர் தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஊக்குவிப்பதற்காகவும், உயர்தர ஆய்விதழ்களில் வெளியிடுவதன் மூலம் அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளைப் பரப்புவதற்காகவும் அறிமுகப் படுத்தியது. 2021ம் ஆண்டில் வழங்கப்பட்ட முதவை கௌரவ விருதுகளின் விபரங்கள் அட்டவணை 1.7ல் கொடுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட ஆய்விதழ் வெளியீடுகள் மற்றும் 2021ம் ஆண்டில் நடாத்தப்பட்ட வருடாந்த ஆராய்ச்சி மாநாடுகளின் விபரங்கள் முறையே அட்டவணை 1.8 மற்றும் 1.9 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 1.7: 2021 ஆம் ஆண்டிற்கான முதவை கௌரவ விருதுகள்

பீடங்கள்	2021இல் வெளியிடப்பட்ட அதியுயர் ஆய்வுக்கட்டுரைகளுக்கான முதவை கௌரவ விருதுகளின் எண்ணிக்கை				
	208வது முதவைக் கூட்டம் (18.01.2021)	209வது முதவைக் கூட்டம் (17.03.2021)	210 வது முதவைக் கூட்டம் (19.05.2021)	211 வது முதவைக் கூட்டம் (18.08.2021)	212வது முதவைக் கூட்டம் (17.11.2021)
கலை கலாசார பீடம்	11	1	3	3	-
முகாமைத்துவ வர்த்தக பீடம்	1	6	2	4	7
பிரயோக விஞ்ஞான பீடம்	1	1	3		3
இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம்	3	2	-	1	-
பொறியியல் பீடம்	1			1	-
பொறியியல் பீடம்	5	3	3	2	5
நூலகம்	1	-	-	-	1
மொத்தம்	**23**	**13**	**11**	**11**	**16**

அட்டவணை 1.8 : பல்கலைக்கழகத்தால் 2021ல் வெளியிடப்பட்ட ஆய்விதழ் வெளியீடுகள்

பீடம்	ஆய்விதழ் வெளியீடுகள்
கலை கலாசாரம்	களம் ஆய்விதழ்l -தொகுதி XIII, வெளியீடு (01-04) ,2020 இயங்குநிலை மூலம் வெளியடப்பட்டன.
	களம் ஆய்விதழ் - தொகுதி XIV, வெளியீடு (01), 2021

முகாமைத்துவ வர்த்தகம்	முகாமைத்துவ ஆய்விதழ் தொகுதிXVI வெளியீடு I மற்றும் II
	தகவல் முறைமை மற்றும் தகவல் தொழிநுட்ப ஆய்விதழ் தொகுதி. VI வெளியீடு I மற்றும்II
	சந்தைப்படுத்தல் ஆய்விதழ் தொகுதி. VI தொகுதி I மற்றும் II
	வணிகப்பொருளியல் ஆய்விதழ் தொகுதி III வெளியீடு I மற்றும் II
பிரயோக விஞ்ஞானங்கள்	விஞ்ஞான ஆய்விதழ் தொகுதி: 02 .இல: 01
	விஞ்ஞான ஆய்விதழ் தொகுதி: 02 இல: 02
தொழிநுட்பம்	இலங்கைத் தொழிநுட்ப ஆய்விதழ் தொகுதி 02, வெளியீடு 01.
	இலங்கைத் தொழிநுட்ப ஆய்விதழ் தொகுதி 02, விஷேட வெளியீடு
	இலங்கைத் தொழிநுட்ப ஆய்விதழ் தொகுதி 02. வெளியீடு 02

வருடாந்த ஆராய்ச்சி அமர்வுகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை 1.9: பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட வருடாந்த ஆராய்ச்சி அமர்வுகள் மற்றும் மாநாடுகள்

2021 இல் நடாத்தப்பட்ட மாநாடு/ஆய்வமர்வு	நடாத்தியது
இலங்கைத்தென்கிழக்குப் பல்கலைக்கழக 9 ஆவது சர்வதேச கலைகள் ஆய்வமர்வு (SEUARS 2020)	கலை கலாசார பீடம்
10 ஆவது வருடாந்த விஞ்ஞான ஆய்வமர்வுகள் – 2021 (ASRS 2021)	பிரயோக விஞ்ஞான பீடம்
8ஆவது சர்வதேச ஆய்வமர்வு	இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம்
9ஆவது இளங்கலை ஆராய்ச்சி கலந்தாய்வு	
விஞ்ஞான மற்றும் தொழிநுட்பத்திற்கான சர்வதேச மாநாடு (ICST)	தொழிநுட்ப பீடம்
இடர் அனர்த்த முகாமைத்துவம் குறித்த பிராந்திய ஆய்வமர்வு	

- கற்பித்தல் மற்றும் கற்றல் நோக்கங்களுக்காக கற்றல் முகாமைத்துவ முறைமை (எல்எம்எஸ்) இன் பயன்பாடு ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளதுடன் கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளில் எல்எம்எஸ் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முன்னேற்றங்களை தொடர்ந்தும் கொண்டுநடாத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- 2021 டிசம்பர் இறுதியின் போது, மொத்தமாக 72 (37%) கல்விசார் ஊழியர்கள் தங்கள் கலாநிதி கற்கைகளை முடித்திருந்தனர்.
- பேராசிரியர்கள் பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 2021 டிசம்பர் இறுதியின் போது 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- செயற்பாட்டுத் திட்டம் மற்றும் கொள்முதல் திட்டம் போன்றன விரிவான முறையில் முடிக்கப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டில் தொழிநுட்ப பீடமானது விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் தொடர்பான தனது முதலாவது சர்வதேச மாநாட்டை நடாத்தியது.

1.10 தவறுகளும் நியாயப்படுத்தல்களும்

i. பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பகுதியில் கடலரிப்பு தொடர்ந்தும் இடம்பெறுகிறது. தற்போதைய மூலதன ஒதுக்கீட்டில் பல்கலைக்கழகத்தால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் இந்த விடயத்தை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது, மேலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண சில முயற்சிகளை மேற்கொள்வதாக அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

ii. கல்ஓயா ஆற்றின் பெருக்கெடுப்பு காரணமாக மழை காலங்களில் வெள்ளப்பெருக்கு அபாயத்தினை பல்கலைக்கழகம் எதிர்கொண்டுள்ளது. இதனைத் தடுக்கும் பாதுகாப்பு வரம்பினை அமைத்துக்கொள்ள பல்கலைக்கழகத்தினால் முடியவில்லை. பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகியும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

iii. UG அல்லது PG திட்டங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை ஈர்ப்பதில் தோல்வி. இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து கிட்டத்தட்ட 360 கிமீ தொலைவில் உள்ள பல்கலைக்கழகத்தின் இருப்பிடமே இதற்குக் காரணமாகும். கொழும்பில் இருந்து இ.தெ.கி.ப.க இற்கு பஸ் அல்லது ரயிலில் பயணம் செய்ய கிட்டத்தட்ட 9 மணிநேரம் செலவாகும் என்பதால், உள்ளக போக்குவரத்து இப் பல்கலைக்கழகத்திற்கு சேர விரும்பும் மாணவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை. உள்நாட்டு விமானங்கள் தற்போது இயங்குவதில்லை.

iv. நாட்டிற்குள்ளும் வெளிநாட்டிலும் இருந்து வருகை தரும் அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களை ஈர்க்கத் தவறியது. iii இல் முன்னிலைப்படுத்தப்பட்ட அதே காரணங்கள் இதற்கும் காரணமாக இருக்கலாம்.

v. ஆட்சேர்ப்பு:

பின்வரும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள பல்கலைக்கழகத்திற்கு முடியவில்லை.

- ஆரோக்கிய நிலையத்துக்கான நிரந்தர வைத்தியர்கள் - வைத்தியர்கள், சுகாதார அமைச்சின் கீழ் கூடிய சம்பளத்தில் சிறந்த வாய்ப்புகளைப் பெறுவதனால், பல்கலைக்கழக சேவையில் இணைய ஆர்வம் காட்டாத

நிலை காணப்படுகின்றது. எனினும், பகுதிநேர அடிப்படையில் நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் சேவையினைப் பெறுவதன் மூலம் ஆரோக்கிய நிலையம் இயங்கி வருகின்றது.

- செயற்திட்ட முகாமையாளர் - தகைமையும் அனுபவமுமுள்ள பொறியியலாளர்கள் குறைந்த சம்பளத்தில் பல்கலைக்கழகத்தில் சேவையாற்ற விரும்பாத காரணத்தினால் செயற்திட்ட முகாமையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முடியவில்லை.

1.11 எதிர்கால திட்டங்கள்

- பாடத்திட்ட மீளாய்வுக்கு ஒரு நிலையான மற்றும் விரிவான கொள்கையால் அறிவிக்கப்பட்ட கல்வித் திட்டங்களின் பாடத்திட்டத் திருத்தங்களைச் செய்வது

- நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல புதிய பட்டப்படிப்பு நிகழ்சித் திட்டங்களை வழங்க இ.தெ.கி.ப.க நடவடிக்கை எடுத்துள்ளது. பீடங்களால் தொடங்கப்படவுள்ள புதிய பட்டப்படிப்புகள் மற்றும் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் தற்போதைய நிலையை அட்டவணை 1.10 காட்டுகிறது.

அட்டவணை 1.10: ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கற்கை நெறிகள்

பீடங்கள்	இளமானிப் பட்டாதாரி முதுகலைப் பட்டதாரி/ சான்றிதழ் டிப்ளோமா திட்டங்கள்	SLQF Level	பொது / விஷேட (பொருத்தமாயின்)	கால எல்லை	மொழி மூலம்	தற்போதைய நிலை
கலை கலாசார பீடம்	வரலாற்றில் கலைகள் இளமானி கௌரவப் பட்டம்	6	கௌரவ	04 வருடங்கள்	தமிழ்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது அத்துடன் 2020/2021 கல்வியாண்டில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது
	சுற்றுலாத் துறையில் கலைகள் இளமானி கௌரவப் பட்டம்	6	கௌரவ	04 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்	செயற்பாட்டில் உள்ளது மேலும் 2023 இல் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது
இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்	தகவல் தொழிநுட்பத்தில் டிப்ளோமா	3	-	01 வருடம்	ஆங்கிலம்	நுடைபெற்றுக் கொண்டிருக்கிறது
	அரபு மொழியில் சான்றிதழ்	2	-	06 மாதங்கள்	அரபு	கற்கை நெறிகளின் முன்மொழிவுக்கு பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.
	அரபு மொழியில் டிப்ளோமா	3	-	01 வருடம்	அரபு	

முகாமைத்துவ வர்த்தக பீடம்	கலாநிதி	12		3 வருடங்கள்	ஆங்கிலம்	ஜனவரி 2022 இற்குள் தொடங்கப்படும்
	முது தத்துவமானி	11				
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	கணனி ஆய்வக தொழிநுட்பத்தில் சானிறிதழ்/ டிப்ளோமா	3	-		ஆங்கிலம்	முன்மொழிவைத் தொடங்கவுள்ளது
	தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலில் டிப்ளோமா (DICT)	3	-	01 வருடம்		மூதவை இந்தத்திட்டத்தை CDC/மூதவைக்குப் பரிந்துரைத்தது.
	பல்துறைசார் கற்கை நெறியில் விஞ்ஞான இளமானி கௌரவப் பட்டம்	6	கௌரவ	04 வருடங்கள்		முன்மொழிவு துவங்கப்படவுள்ளது
	விஞ்ஞான இளமானி (வெளிவாரிப் பட்டம்): (FAS இலுள்ள பட்டங்களுக்கான வெளிவாரிக் கற்கைகள்)	5	பொது	03 வருடங்கள்		முன்மொழிவு துவங்கப்படவுள்ளது
	பிரயோக மற்றும் சுற்றுச்சூழல் புவியியலில் கௌரவ பட்டம்	6	கௌரவ	04 வருடங்கள்		பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது
	பகுப்பாய்வு/ மருந்து வேதியலில் விஞ்ஞான இளமானி	5	கௌரவ	04 வருடங்கள்		முன்மொழிவு துவங்கப்படவுள்ளது
	இ.தெ.கி.ப.க. இல் யூனானி மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை இளங்கலை (BUMS)	6	கௌரவ	04 வருடங்கள்		பகுப்பாய்வு மற்றும் செயலாக்க ஆய்வு நடைபெற்று வருகிறது
	சுற்றுச்சூழல் விஞ்ஞான தொழிநுட்பத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டம்	10	-	02 வருடங்கள	ஆங்கிலம்	உள்ளடக்க மேம்பாடு மற்றும் பயனாளர் கருத்துக்கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
தொழிநுட்ப பீடம்	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமானிப் பட்டம்	5	பொது	03 வருடங்கள்	ஆங்கிலம்	ப.மா.ஆ இல் மீளாய்வில் உள்ளது அத்தோடு 2022 இல் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது
	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப விஞ்ஞான முதுமானிப் பட்டம்	10	-	02 வருடங்கள்		முன்மொழிவை உருவாக்குதல் அத்தோடு 2023 இல் தொடங்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது

- தொழிநுட்ப பீடத்திற்கு ISO சான்றிதழைப் பெறல்.

- வருடாந்த அரபு மொழி தினம் அடுத்த வருடம் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தினால் கொண்டாடப்படும்.

- முறையான மற்றும் நிலையான மீளாய்வுக்கான நியம செயற்பாட்டுக் கொள்கையை ஒழுங்குபடுத்துதல், அனைத்து கற்கைநெறிகளுக்குமான பாடத்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- அனைத்து கற்கை நெறிகளுக்கும் பாடத்திட்ட ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- கற்றல் முகாமைத்துவ முறைமையின் உகந்த செயற்பாட்டை மேம்படுத்தல்.
- மீளாய்வு செய்யப்படாத கல்வித் திட்டங்களை தர உறுதிப்படுத்தல் ஆய்வுக்கு உட்படுத்தல் நிறுவன மீளாய்வினை மேற்கொள்ளலும்.
- பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- சமூகம் மற்றும் தொழிற்துறையால் வேண்டப்படும் கல்வித் திட்டங்களைத் தொடங்குதல்.
- இணை நிறுவன செயற்பாடுகளை தானியங்குபடுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் விரிவான நிறுவன ஆராய்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- பல்கலைக்கழக நாற்காட்டி (University Calendar) மற்றும் கொள்கைக் கட்டமைப்பைத் தொகுத்தல்.
- கூட்டு ஆராய்ச்சிகளுக்காக பிற சர்வதேச கூட்டாளர்களுடன் புதிய இணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்.
- பல்கலைக்கழக மாணியங்கள் மற்றும் பிற போட்டி மாணியங்களைப் பெற ஊழியர்களை ஊக்குவித்தல்.
- பல்கலைக்கழக தரவரிசையில் விளைவினை ஏற்படுத்துவதற்காக ரிசேர்ச் கேட் (Research Gate), கூகுள் ஸ்கொலர் (Google Scholar), அகடமியா (Academia) போன்ற பிரபல்யமான ஆராய்ச்சி வலையமைப்புகளில் கல்வியாளர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பதிவேற்றம் செய்தல்.

குறிப்பிடத்தக்க செயற்பாடுகள்

உப வேந்தர் கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ளல்






இ.தெ.கி.ப.க இன் வெள்ளி விழா கொண்டாட்டம்





வர்த்தக முகாமைத்முவ பீட முகாமைத்துவத் துறையின் ஆய்வு மையத்தின் பிரம்மாண்ட திறப்பு விழா





இ.தெ.கி.ப.க. இன் பல்கலைக்கழக வணிக இணைப்பு வெற்றிகரமாக மூன்றாம் கட்டத்தை நிறைவு செய்தது



பாலின சமத்துவம், ஒப்புரவு (GEE) மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV) பற்றிய விழிப்புணர்வை உயர்த்தும் திட்டம்: சட்ட அம்சத்தில் கவனம் செலுத்துதல்







FAC மூலம் சமூக இணைப்பு திட்டத்தில் (பனாமா வருகை) பணியாளர்களுக்கான வேலைப்பட்டறை



FAC மூலம் சமூக இணைப்புத் திட்டத்தில் (அலிகம்பே விஜயம்) பணியாளர்களுக்கான பட்டறை





விளைவுகளின் மூலம் மாணவர்களின் செயற்றிறனை அளவிடுவது குறித்த மாணவர்களுக்கான பட்டறை



2. வளங்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விபரம்

2.1 மாணவர் மற்றும் நிரந்தர ஊழியர்களின் பரம்பல்

டிசம்பர் 2020 மற்றும் டிசம்பர் 2021 இறுதியின் போதான மாணவர் எண்ணிக்கை மற்றும் அனைத்துப் பிரிவுகளிலுமான நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை விபரங்கள் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1: மாணவர் மற்றும் நிரந்தர ஊழியர்களின் பரம்பல்

பீடம்/திணைக்களம்/பிரிவு/அலகு	மொத்த மாணவர்கள்		மொத்த கல்விசார் ஊழியர்கள்		கல்வி உதவி ஊழியர்கள்		நிர்வாக மற்றும் பிற நிர்வாக ஊழியர்கள்		கல்வி சாரா மற்றும் நிருவாகமல்லாத ஊழியர்கள்	
	2020	2021	2020	2021	2020	2021	2020	2021	2020	2021
கலை கலாசார பீடம்	1183	1258	45	47	08	09	01	01	420	416
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	769	742	32	36	02	02	01	01		
முகாமைத்துவ வர்த்தக பீடம்	1277	1401	34	33	02	02	01	01		
இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்	1274	1308	23	24	01	01	01	01		
பொறியியல் பீடம்	441	479	30	29			02	02		
தொழிநுட்ப பீடம்	614	655	19	25			01	01		
நூலகம்			06	05	01	01	01	01		
பொது நிர்வாகம்							24	21		
வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் பிரிவு							01	01		
உடற்கல்வி பிரிவு					03	03				
தகவல் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவு					01	01				
தொழில் வழிகாட்டல் பிரிவு					01	01				
வலையமைப்பு செயற்பாட்டு மையம்					01	01				
ஏனைய துறைகள்										
மொத்தம்	5,558	5,843	189	199	20	21	33	30	420	416

2.2 உள்நாட்டு மாணவர்கள் விபரம்

அட்டவணை 2.2: உள்நாட்டு மாணவர்களின் (உள்வாரி இளமானி பட்டப்படிப்பில் புதிய மாணவர்களின்) எண்ணிக்கை

பீடம்	கற்கைநெறி	அனுமதி ஆண்டு	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை	கற்கையைத் தொடர்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை	அனுமதி ஆண்டு	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை	கற்கையைத் தொடர்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை
		31 டிசம்பர் 2020 இன்போது				31 டிசம்பர் 2021 இன்போது			
கலை கலாசாரம்	கலை	2018/2019	350	355	361*	2019/2020	421	384	380
முகாமைத்துவ வர்த்தகம்	முகாமைத்துவம்	2018/2019	140	124	124	2019/2020	188	183	183
	வர்த்தகம்		120	106	106		152	149	142
	முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பம்		120	110	109		170	159	159
பிரயோக விஞ்ஞானங்கள்	பௌதீக விஞ்ஞானங்கள்	2018/2019	150	103	103	2019/2020	223	146	136
	உயிரியல் விஞ்ஞானங்கள்		150	125	120		212	161	136
இஸ்லாமிய கற்கைகள், அரபுமொழி	அரபு மொழி	2018/2019	200	177	179	2019/2020	225	206	199
	இஸ்லாமியக் கற்கைகள்		250	217	213		278	268	263
பொறியியல்	பொறியியல்	2018/2019	100	81	81	2019/2020	145	130	130
தொழிநுட்பம்	உயிர் முறைமைகள் தொழிநுட்பம்	2018/2019	85	82	82	2019/2020	109	105	105
	உயிர் முறைமைகள் தொழிநுட்பம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்		75	69	69		100	96	96
மொத்தம்			**1740**	**1549**	**1547**		**2223**	**1987**	**1929**

* **2017/2018 கல்வியாண்டுப் பதிவினை பிற்போட்ட 06 மாணவர்கள் 2018/2019 உடன் இணைந்துள்ளனர்**

அட்டவணை 2.3: உள்வாரி இளமானி பட்டப்படிப்பில் உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை (மாணவர்களின் மொத்த எண்ணிக்கை)

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	அனுமதி ஆண்டு	ப.மா.ஆ அனுமதி (உள்நாட்டு மாணவர்கள்)			அனுமதி ஆண்டு	ப.மா.ஆ அனுமதி (உள்நாட்டு மாணவர்கள்)		
				ஆண்	பெண்	மொத்தம்		ஆண்	பெண்	மொத்தம்
			31 டிசம்பர் 2020 இன்போது				31 டிசம்பர் 2021 இன்போது			
கலை கலாசார பீடம்	கலை	1ம் வருடம்	2018/2019	48	313	361	2019/2020	37	343	380
	கலை	2ம் வருடம்	2017/2018	33	321	354	2018/2019	48	313	361
	கலை	3ம் வருடம்	2016/2017	25	299	324	2017/2018	33	321	354
	கலை(விசேடம்)	4ம் வருடம்	2015/2016	11	133	144	2016/2017	13	150	163
			உப மொத்தம்	**117**	**1,066**	**1,183**	**உப மொத்தம்**	**131**	**1,127**	**1,258**
முகாமைத்துவ வர்த்தக பீடம்	முகாமைத்துவம்	1ம் வருடம்	2018/2019	56	69	125	2019/2020	66	117	183
நன்கொடை	10.06	296,568,554.94	138,002,697.62
		5,061,017,303.82	**5,214,063,008.78**
குறிப்பு 11– ஒதுக்கங்கள்			
திரண்ட நிதி		(502,486,975.73)	(422,634,545.45)
காலக்கழிவு மற்றும் தேய்மானத்தின் தேறிய மீதி (முந்தைய ஆண்டுகளின் சீராக்கல்)		(20,857,987.97)	(63,797,896.53)
வருடத்திற்கான தேறிய பற்றாக்குறை அல்லது மிகை		4,996,801.31	(16,054,533.95)
வெவ்வேறு வருவாய்க்கு மாற்றப்பட்டது		(3,683,965.09)	-
		(522,032,127.48)	**(502,486,976)**
குறிப்பு 12- மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்			
மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	12.01	530,887,790.00	510,537,790.00
		530,887,790.00	**510,537,790.00**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கணக்குகளுக்கான குறிப்புகள

டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2021 ரூபா	2020 ரூபா
குறிப்பு 13 - சுய நிதியிடல் நிகழ்ச்சிக்கான நிதிகள்			
CEDPL அபிவிருத்தி நிதி		11,601,766.82	9, 611,282.02
SFA/ பீட அபிவிருத்தி நிதி -FMC		1,766,250.20	1,564,269.53
SFA/ பீட அபிவிருத்தி நிதி -FAC		86,635.02	35,540.93
SFA/ பீட அபிவிருத்தி நிதி -FT		2,730.00	2,000.00
SFA/ பீட அபிவிருத்தி நிதி -FAS		19,047.00	-
		13,476,429.04	**11,213,092.48**
குறிப்பு 14 - பணிக்கொடை			
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	14.01	425,897,567.05	391,361,307.31
		425,897,567.05	**391,361,307**
குறிப்பு 15 – செலுத்த வேண்டிய கணக்குகள்			
மீளளிக்கக்கூடிய வைப்பு - விஞ்ஞான ஆய்வுகூடம்	15.01	657,800.00	657,800.00
மீளளிக்கக்கூடிய வைப்பு - நூலகம்	15.02	163,400.00	163,400.00
மீளளிக்கக்கூடிய வைப்பு - விடுதி	15.03	3,331,600.00	3,328,600.00
மீளளிக்கக்கூடிய வைப்பு - ஒப்பந்தக்காரர்கள்	15.04	425,000.00	211,500.00
மீளளிக்கக்கூடிய வைப்பு - வழங்குனர்கள்	15.05	390,000.00	581,000.00
பிடிமானத் தொகை - ஒப்பந்தக்காரர்கள்	15.06	13,484,430.52	24,491,390.97
பிடிமானத் தொகை - வழங்குனர்கள்	15.07	6,061,722.65	11,385,214.42
இ.தெ.கி.ப.க இலிருந்தான நிலுவைகள்	15.08	21,651,245.47	22,838,375.57
முற்பணமாக பெற்றவை - SFA நிகழ்ச்சிகள		81,746,050.00	62,146,095.00
SFA நிகழ்ச்சிகளிலிருந்து செலுத்த வேண்டியவை		265,848.07	430,365.63
உள்ளக அலகுகளின் கொடுக்கல் வாங்கல் தீர்ப்பனவு		(13,000,000.00)	(13,000,000.00)
		115,177,096.71	**113,233,741.59**
குறிப்பு 16 - ஏனைய வருமானம்			
பதிவுக் கட்டணங்கள்		2,497,750.00	4,203,940.00
பரீட்சைக் கட்டணங்கள்		410,700.00	380,675.00
வட்டி		2,533,517.93	3,344,244.64
வாடகை		2,756,942.10	2,671,567.95
விற்பனைகள்		1,988,198.13	2,638,936.72
தண்டப்பணங்கள்		147,484.00	2,024,042.32
நானாவித வருமானங்கள்		11,885,589.15	9,559,154.02
		22,220,181.31	**24,822,560.65**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கணக்குகளுக்கான குறிப்புகள

டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2021 ரூபா	2020 ரூபா
குறிப்பு 17- சுய நிதியிடல் கற்கைகளிலிருந்தான வருமானம்			
வெளிவாரிப்பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்		35,599,772.22	23,366,466.08
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FMC		6,852,221.03	5,392,750.05
SFA பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FAC		2,269,564.51	143,984.02
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FT		10,000.00	36,000.00
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FAS		446,020.00	-
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FIA		16,445.00	-
		45,194,022.76	**28,939,200.15**
குறிப்பு 18 - சுய நிதியிடல் கற்கைகளுக்கான செலவு			
வெளிவாரிப்பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்		14,264,202.64	8,478,024.18
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FMC		6,696,257.01	4,748,971.88
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FAC		1,840,333.31	58,173.89
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FT		9,286.00	33,818.60
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FAS		445,444.60	-
SFA/ பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FIA		16,445.00	-
		23,271,968.56	**13,318,988.55**

8. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

BTC/C/SEUSL/01/21/02 28 ஜூலை 2022

உப வேந்தர்,
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2021 டிசம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றக்கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகள் உள்ளடங்களாக நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆவது பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1) ஆவது பிரிவின் படி இந்த அறிக்கையில் காணப்படுகின்ற எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானங்கள் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டும். அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2021

டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) ரூபா 27,979,710 தொகையான முன்னைய கால பிழை திருத்தம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் பின்னோக்கி சீர்செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்கான மிகையில் முன்னைய ஆண்டு சீராக்கமாக சீர்செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் 07 இன் 65 ஆவது பந்தியின் படி வருடாந்தம் மீளாய்வு செய்யப்படவில்லை. ரூபா. 766,109,399 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் 03 இற்கு இணங்க மதிப்பிடப்பட்ட பிழையை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் 07 இன் 47 ஆவது பந்தியின் படி, ஒவ்வொரு மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வது அவசியமாக இருக்கலாம். எவ்வாறாயினும், 2011 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா. 450,330,000 மதிப்பிலான பல்கலைக்கழகத்தின் 05 காணிகள் கடந்த 10 வருடங்களாக மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை.

(ஈ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 31 டிசம்பர் 2021 இன் போதான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களிற்கான செலவினம் ரூபா.2,158,550,419 ஆகும், ஆனால் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் அறிக்கையின்படி, அதன் செலவினம் ரூபா. 1,923,388,792 ஆகவிருந்தது. ரூபா. 235,161,627 வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது

அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2021 இற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்.

ஏனைய தகவல்கள் பல்கலைக்கழகத்தின் 2021 ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது, ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களைப் படித்து, அவ்வாறு செய்யும்போது, ஏனைய தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுடன் முரணாக உள்ளதா அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவு அல்லது வேறுவகையில் தவறாகக் குறிப்பிடப்பட்டதாகத் தோன்றுகிறதா என்பதைக் கருத்தில்கொள்ளல்.

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என நான் முடிவு காண்பதானது அந்த விடயங்களை என்னால் அறிக்கையிடுவது அத்தியவாசியமானது என்பதனாலாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம்

நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகத்தின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியான கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமார்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவைத் தவிர, எனது பரீட்சித்தலில் காணப்படுகின்றனவான கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கிறேன், 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (அ) இன் பிரகாரம், முறையான கணக்குப் பதிவுகள் பல்கலைக்கழகத்தால் வைக்கப்பட்டுள்ளன.

2.1.2 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ)(iii) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டோடு ஒத்துப்போகின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ)(iv) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய

ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் உள்ளடக்குகிறது. பந்தி 1.2 (அ), இனைத்தவிர

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே பல்கலைக்கழகத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் பல்கலைக்கழகம் இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்,

சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு முறைகளின் 571ஆவது நிதி ஒழுங்கு முறை	02 முதல் 08 வருடங்கள் வரை மீளப்பெறக்கூடிய ரூபா 566,000 கேள்விமனு வைப்புத்தொகை மற்றும் 40 பிடிமானத் தொகையான ரூபா 18,267,884 தொடர்பாக அரச வருவாய்க்கு செலுத்தவோ அல்லது தீர்ப்பனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன குறியீட்டின் XXவது அத்தியாயத்தின் உபபிரிவு 3.1 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10 ஜூலை 2017 திகததியிட்ட சுற்றறிக்கை கடித இலக்கம். 10/2017	அனைத்து ஊழியர்களும் விரல் அடையாள இயந்திரம் மூலம் தங்களது வருகையை பதிவுசெய்ய வேண்டும் என்றாலும், கல்விசார் ஊழியர்கள் அந்தத் தேவையை நிறைவேற்றவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12(எ) இன் தேவைப்பாடுகளின்படி பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கிணங்க செயற்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.

(அ) 2015 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கல்விசார் ஊழியளர்களுக்கான நெறிமுறைகள் மற்றும் கல்விப் பொறுப்புக்கூறலின் படி, துறைத் தலைவர், தலைமைப் பேராசிரியர், பேராசிரியர், சிரேஸ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர், போதகர் தரம் I மற்றும் போதகர் தரம் II ஆகியோரால் வருடத்திற்கு குறைந்தபட்ச மாணவர் தொடர்பு நேரம் தனிப்பட்ட நேர அட்டவணையில் முறையே 180, 300, 360, 380, 450, 480 மற்றும் 510 மணிநேரங்கள் என பிரதிபலிக்க வேண்டும். கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 2021 ஆம் ஆண்டில் 6 பீடங்களில் உள்ள 140 கல்விசார் ஊழியர்களிடையே 55,000 மாணவர் தொடர்பு நேரம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும், மேற்கூறிய விதிமுறைகளில் 43 சதவீதத்தை குறிக்கும் வகையில் 23,665 மணிநேரம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர் ஆராய்ச்சி அல்லது தொழில்துறை வேலைவாய்ப்புகள், மருத்துவப் பணிகள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மேற்பார்வைக்கான பணி விதிமுறை ஒதுக்கீட்டை நிரூபிக்க எந்த அறிக்கையும் கணக்காய்விற்கு கிடைக்காமையினால், மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் ஊழியர்களின் மொத்த பணிச்சுமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் பணி விதிமுறைகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் ஒரு வழிகாட்டுதலை உருவாக்கியுள்ளது என்பதைக் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) வணிக நிர்வாக இளமானி மற்றும் கலைகள் இளமானி வெளிவாரி பட்டப்படிப்புகளின் மாணவர் வழிகாட்டி கை நூல்களின்படி, பட்டப்படிப்பு திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான குறைந்தபட்ச கால அளவு 03 கல்வி ஆண்டுகள் ஆகும். எவ்வாறாயினும், மேற்படி பட்டப்படிப்புகளைப் பூர்த்தி செய்ய 05 முதல் 07 வருடங்கள் வரையான குறைந்தபட்ச காலப்பகுதி எடுக்கப்பட்டன. பட்டப்படிப்பை முடிப்பதில் தாமதம் ஏற்படுவதால் மாணவர்களின் தொழில் மற்றும் வேலை வாய்ப்புகள் மோசமாகப் பாதிக்கப்படும்.

2.2.4 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்பினைத் தவிர்த்து பல்கலைக்கழக வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப் பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்,

மல்வத்தை விவசாய தொழிநுட்ப பூங்கா உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான ஒப்பந்தம் 29 மார்ச் 2021 அன்று ரூபா. 138,444,958 ஒப்பந்த மதிப்பில் வழங்கப்பட்டதுடன், ஒப்பந்தத்தின்படி 28 ஜூன் 2022 அன்று முடிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வுட்கட்டமைப்பின் பௌதீக முன்னேற்றம் 35 சதவீதமாகவே இருந்தது அத்துடன் ரூபா.56,273,588 ஒப்பந்த மதிப்பீட்டிலான 09 வேலை அலகுகள் 01 மே 2022 வரை கூட ஆரம்பிக்கப்படவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(a) ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகள் ரூ.1,876,449 01 முதல் 20 ஆண்டுகள் வரையிலும் மீளப்பெறப்படாமல் 31 டிசம்பர் 2021 இன்போது நிலுவையில் உள்ளன. மேலும், ஒப்பந்தங்களை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து மீளப்பெறவேண்டிய ரூபா. 18,337,779 பிணைத்தொகையில், 12 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா. 1,043,137 தொகையானது 31 டிசம்பர் 2021 இன்போது நிலுவையில் உள்ளது.

(b) 02 வருடங்களுக்கு மேலாகவுள்ள ரூபா. 687,007 செலுத்த வேண்டிய நிலுவைகளை பல்கலைக்கழகம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(c) 2018 ஆம் ஆண்டில் ரூபா. 10,221,473 செலவில் மெகா சேமிப்பகத்தின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, 23 பெப்ரவரி 2021 அன்று ரூபா. 5.25 மில்லியன் செலவில் திருத்தப் பணிகளுக்காக பொறியியல் பணிமனையிடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், முறையற்ற நிறுவல் பணிகள் 26 மே 2022 வரையிலும் இன்னும் செயற்பாட்டிலுள்ளமையினால் பணிமனை முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

(d) 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா.87,186,796 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வக உபகரணங்கள் 02 முதல் 05 வருடங்கள் வரை விளைவற்றிருந்தன.

(e) ஒவ்வொரு நாளின் முடிவிலும் REPO வைப்புத்தொகையில் பணத்தை வைப்புச் செய்து கூடுதல் வருமானம் ஈட்டுவது ஏனைய பல்கலைக்கழகங்களில் நடைமுறையில் இருந்தாலும், பல்கலைக்கழகத்தின் பொறுப்பான அதிகாரிகள் அதைச் செய்யவில்லை. அத்துடன் ஒவ்வொரு நாளின் முடிவிலும் மீளாய்வாண்டில், நடப்புக் கணக்கில் ரூபா.84 மில்லியன் முதல் ரூபா.211 மில்லியன் வரையிலான தொகை இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(f) கடந்த ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு ஆய்வுக் கொடுப்பனவு மற்றும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ஆராய்ச்சிக் கொடுப்பனவு ரூபா. 80,871,935 ஆகும். இருப்பினும், கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமை போன்ற அறிவுசார் சொத்துக்கள் பெறப்படவில்லை அத்துடன் வேறு எந்த அடைவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதன்படி, ஆய்வுக் கொடுப்பனவின் ஊடாக நாடு அல்லது பிராந்தியம் எந்தவொரு பங்களிப்பினையும் பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(g) மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் வெபோமெட்ரிக்ஸ் தரவரிசைகளின்படி 2022 இல் பல்கலைக்கழக தரவரிசை 13 இலிருந்து 16 ஆக பின்தங்கியிருந்தது.

(h) பல்கலைக்கழகத்தின் தற்போதைய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொழில் சந்தை மற்றும் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும், மேலும் பாடத்திட்டத்தில் தொழிநுட்ப பாடங்கள் மற்றும் மொழித் திறன்கள் ஆகியவை எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். எவ்வாறாயினும், முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் வணிக நிர்வாக இளமானி மற்றும் வணிகவியல் இளமானி பட்டத்திற்கான பாடத்திட்டம் 2012 முதல் 09 ஆண்டுகளுக்கும் மேலாக திருத்தப்படவில்லை என்பதும், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் கலை இளமானிப்பட்டமானது 2005 முதல் 16 ஆண்டுகளாக திருத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. திருத்தப்பட்டது.

(i) லங்கா கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பிலிருந்து (LEARN) வரையறையற்ற தரவு வலையமைப்பு இணைப்பு பெறப்பட்டு, 2021 ஆம் ஆண்டுக்கான தொகையாக ரூபா. 12,835,303 செலுத்தப்பட்டது. மறுபுறம், அதே நோக்கத்திற்காக மொபிடெல் வை-பை வசதி இனைப் பெறுவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா.11,869,245 செலுத்தப்பட்டது. டேட்டா நெட்வொர்க்

இணைப்புக்கான செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் LEARN வலையமைப்பு சேவையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(j) கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 31 டிசம்பர் 2021 இன் போது கல்வித் தரங்களில் அங்கீகரிக்கப்பட்ட 424 ஆளணிகளில், 112 வெற்றிடங்களும் நிர்வாக தரங்கள், தொழிநுட்ப தரங்கள் மற்றும் கல்வி உதவி தரங்களில் அங்கீகரிக்கப்பட்ட 142 ஆளணிகளில், 62 வெற்றிடங்களும் உள்ளன.

(k) 2021 ஆம் ஆண்டுக்கான மூலோபாயத் திட்டத்தின்படி, ஆறு இலக்குகளின் கீழ் தொண்ணூறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றில் பதினேழு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

(l) 2017 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் 20 அதிகாரிகளுக்கு ரூபா.6,545,485 தொகையான ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், 10 அதிகாரிகள் 15 ஜூன் 2022 வரையிலும் கூட ஆராய்ச்சியை முடிக்கவில்லை.

(m) ரூபா. 201,368,432 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் மீளாய்வாண்டில் சரிபார்க்கப்படவில்லை அத்துடன் இறுதி சரிபார்ப்பு 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

டபுல்யூ.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான அதானங்கள்

SEUSL /VC/AR/2022/02

24 ஆகஸ்து 2022

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இது 01.08.2022 திகதியிட்ட தங்களது அறிக்கை **BTC/C/SEUSL/01/21/01** தொடர்பானது. அறிக்கையில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான எங்கள் அவதானிப்புகளை கீழே தருகிறோம்.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(a) தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்றில் முந்தைய ஆண்டு சீராக்கல்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(b) இது தொடர்பில் சில குழுக்கள் நியமிக்கப்பட்டன. எனினும், பல்வேறு காரணங்களால் இப்பணிகளை முடிக்க முடியவில்லை. பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(c) மட்டக்களப்பு மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சேவையைப் பெற்று பல்கலைக்கழகத்தின் காணிகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர்கள் பல்கலைக்கழகத்தில் தேவையான ஆவணங்களை சேகரித்துக் கொண்டதுடன், விரைவில் பணி முடிக்கப்படும் என தெரிவித்தனர்.

(d) தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் அனைத்து விபரங்களையும் நேரடியாக சேகரிக்க ஒரு இணக்கக் குழு அமைக்கப்படும், எனவே, அவற்றினை நிதிநிலை

அறிக்கை மற்றும் பொருள் மெய்மையாய்வுடன் இணக்கம் செய்யலாம். இணக்கம் செய்வதற்கான செயல்முறை நீண்ட செயல்முறையாக இருப்பதால், அதனை செய்துமுடிக்க அதிக நேரம் எடுக்கும்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2021ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1
2.1.1
2.1.2
2.1.3

2.2
2.2.1
2.2.2

சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்

(a) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குமுறைகளின் நிதி ஒழுங்குமுறை 571.

விபரம்	தொகை (ரூபா.)	நிலை
பிடிமானம் - ஒப்பந்தக்காரர்கள்	13,142,851.82	பிடிமானத்தொகை மற்றும் மீளப் பெறக்கூடிய வைப்புத் தொகையைச் செலுத்த அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மீதமுள்ள கோரப்படாத நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட பிரிவுகளின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக வருவாய்க்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பிடிமானம் - வழங்குனர்கள்	5,125,032.25	
மீளப்பெறக்கூடிய வைப்புகள்	434,000.00	

(b)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன குறியீட்டின் XXவது அத்தியாயத்தின் உபபிரிவு 3.1 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10 ஜூலை 2017 திகதியிட்ட சுற்றறிக்கை கடித இலக்கம். ஒரு பொதுவான நடைமுறையாக, இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக அமைப்பில் கல்விசார் ஊழியர்களின் உள்வருகைகள் மற்றும் வெளிச் செல்லுகைகள் பேணப் படுவதில்லை. கல்விசார் ஊழியர்கள் பல்வேறு கற்பித்தல்-கற்றல், ஆராய்ச்சி மற்றும் சமூக நலன் சார்ந்த

10/2017	செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அவர்களின் பணி 08 வேலை மணித்தியாளங்களுக்கு மட்டுப்படுத்தப் படவில்லை. எனவே, இது நடைமுறையில் இல்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12(g) இன் தேவைப்பாடுகளின்படி பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கிணங்க செயற்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல் தவிர.

(a) கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள மணிநேரங்கள் விரிவுரையாளர்களின் கற்பித்தல் நேரத்தை அடிப்படையாகக் கொண்டவை, இருப்பினும், அவர்கள் கற்பித்தல் மற்றும் கற்றலில் ஈடுபடுவது மட்டுமல்லாமல் ஆராய்ச்சி, மேற்பார்வை மற்றும் நிர்வாகப் பணிகளிலும் ஈடுபடுகின்றனர். மேலும், இது மொத்த மாணவர்களின் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் ஊழியர்களின் மொத்த பணிச்சுமை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, ப.க.மா.ஆ சுற்றறிக்கையின் அடிப்படையில் பணி விதிமுறைகளை கண்காணிக்க புதிய திருத்தப்பட்ட வழிகாட்டுதலை தயார் செய்யத் தேவையான நடவடிக்கையை பல்கலைக்கழகம் எடுக்கும்.

(b) ஒரு பிரிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் விடைத்தாள்களை திருத்தி முடிக்க எடுக்கும் நேரத்தின் காரணமாக முக்கிய தாமதம் ஏற்பட்டதாக CEDPL குறிப்பிட்டது. எனவே, குழுவாக திருத்துதல் முறையினை அமுல்படுத்தி, மூன்று மாத காலத்திற்குள் முடிவுகளை வெளியிட முடிவு செய்துள்ளோம். முடிவுகளை தாமதமாகச் சமர்ப்பிப்பதற்காக கொடுப்பனவினை கழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பின்வரும் காரணங்களால் 2014/2015 மற்றும் 2015/2016 பிரிவினர் பட்டப்படிப்பினை பூரணப்படுத்தலில் தாமதம் ஏற்பட்டது.

1. ஈஸ்டர் குண்டுவெடிப்பு காரணமாக கட்டுப்பாடுகளும் சூழ்நிலையும் ஏற்பட்டது.
2. கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக பல்கலைக்கழக நடவடிக்கைகள் மூடப்பட்டமை, இயங்கலையில் தேர்வை நடாத்துவதற்கான புதிய நடைமுறையை உருவாக்குதல் மற்றும் அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறுதல் மற்றும் மதிப்பெண்களுக்கான தேர்வுத் தாள்களை வரிசைப்படுத்துவதில் தாமதம்.

இதனைத் தவிர, CEDPL இன்று வரை முடிந்தவரையில் அதன் பின்னடைவுகளை சரிசெய்துள்ளது.

2.2.4 இந்தப் பணி வழங்கப்பட்ட நேரத்தில், தற்போதுள்ள தொற்றுநோய் அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கோவிட் - 19 தொற்றுநோய் மற்றும் அதனைத் தொடர்ந்த நாடு முடக்கல், பயணத் தடை, இறக்குமதி கட்டுப்பாடு, பொருள் பற்றாக்குறை, தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் கட்டுமானப் பொருட்களின் திடீர் மற்றும் எதிர்பாராத விலை உயர்வு போன்ற மோசமான விளைவுகள் காரணமாக, ஒப்பந்ததாரரால் அத்தகைய ஒன்பது பிரிவுகளினதும் பணிகளைத் தொடங்க முடியவில்லை. மேலும், பணி தொடங்கியதில் இருந்து அவ்வப்போது ஏற்படும் மழைக்காலம், பணிகள் தாமதமாவதற்கு மற்றொரு முக்கிய காரணியாக கருதப்படுகிறது. இதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது. இதுவரை 40 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாட்டில் உள்ள பணிகள் பகுதியாக இணைக்கப்பட்டுள்ளன. வேலைகளின் செயற்பாடுகளைப் பின்தொடரும் பொருட்டு, பணிகளை விரைவுபடுத்துவதற்காக அவ்வப்போது முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படுகிறது.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(a) பெறவேண்டிய கணக்குகள்

கடன்கள் மற்றும் முற்பணங்கள்

பெயர்	விளக்கம்	ஆண்டு	தொகை	மீட்பு செயல்முறையின் நிலை
இம்தியாஸ், ஏஆர்எம்.	இடர் கடன்	2001	29,058	மீளப்பெறுகைகளுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் நடைபெற்று வருகின்றன.- வழக்கு எண். DCA/M/1251/19
செஹாம். ஏ.எம்	இடர் கடன்	2018	49,984	அவரது நிதி நிலுவைகளில் இருந்து மீளப்பெறப்படும்.
ஏ.எம்.செகாம்	விழா முற்பணம்	2018	27,693	அவரது நிதி நிலுவைகளில் இருந்து மீளப்பெறப்படும்.
எஸ்.எம்.ஆலிப்	பெறத்தக்க சம்பளம்	2018	1,445,948	பணிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது – வழக்கு எண். LT/BT/362/2018
ஏ.என்.நௌசாத்	பெறத்தக்க சம்பளம்	2019	68,287	அவரது மாதாந்த சம்பளத்தில் இருந்து மீளப்பெறப்படுகிறது.
ஐ.எஸ்.நர்சீத்	பெறத்தக்க சம்பளம்	2019	8,685	சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு NAE மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

இ.தெ.கி.ப.க. இற்கான நிலுவைகள்

தொ.இல	விளக்கம்	தொகை (ரூபா.)	மீட்பு செயல்முறையின் நிலை
1	கே.டி.இபேட்	82,238.53	உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு வேலைகள் பொறியியலாளரால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
2	ஆந்தோனி பில்டர்ஸ்	4,374.40	
3	அமீன் கன்ஸ்ட்ரக்சன்	36,198.36	
4	சென்ட்ரல் இன்ஜினியரிங் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்	26,631.24	
5	அப்துல் அஸீஸ் (பவர் கன்சம்ப்சன்)	6,672.93	
6	ஸ்மாட் பவர் என்ஜினியரிங்	1,000.00	
7	ஐ.எல். சம்சுதீன்	28,000.00	நலன்புரி பிரிவு மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
8	என்.எம்.அஸ்லம்	5,000.00	நலன்புரி பிரிவு மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சிற்றுண்டிச்சாலை நடாத்துபவர்களின் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையிலிருந்து மீளப்பெற முடியும்.
9	ஏ.எம்.ஸப்ரி இர்சாத்	1,000.00	
10	எம்.நாசிக் அஹமட்	12,000.00	
11	எஸ்.ஏ.ஹமீட்	6,000.00	
12	ஏ.ஆர்.பிர்னாஸ்	5,000.00	
13	ஏ.எம்.ஸப்ரி இர்சாத்	5,000.00	
14	எம்.எம்.ரியாஸ்	3,000.00	
15	ஏ.எம்.நதார்	13,000.00	
16	ஏ.ஏ.லத்தீப் (மல்டிஷொப் பவர் கன்சம்ப்ஷன்)	11,678.57	பிரதி பதிவாளர்/ பொதுநிர்வாகப் பிரிவினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பிணை மீறல்

பெயர்	விளக்கம்	ஆண்டு	தொகை	மீட்பு செயல்முறையின் நிலை
இம்தியாஸ், ஏஆர்எம்	பிணை மீறல்	2009	1,043,137.22	மீளப்பெறுகைகளுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் நடைபெற்று வருகின்றன.- வழக்கு எண். DCA/M/1251/19

மேலும், 261வது பேரவை கூட்டத்தில் பத்திர மதிப்பை அதன் பிணை உத்தரவாதங்களிலிருந்து இருந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(b) இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவைத் தொகையை செலுத்தவோ அல்லது கோரப்படாத நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட பிரிவுகளின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக வருவாய்க்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்படும்.

(c) குறிப்பெடுக்கப்பட்டது. பொறியியல் பட்டறையானது மெகா களஞ்சியத்தினை பின்வருமாறு பயன்படுத்துகிறது.

பின்வரும் வேலைப்பட்டறை அலகுகள் பொறியியல் பட்டறை II இற்கு (அதாவது மெகா ஸ்டோர்ஸ்) மாற்றப்பட்டுள்ளன:

1) வார்ப்பகம்
2) தாள் உலோக பட்டறை, மற்றும் பொருத்துதல் பட்டறை, மற்றும்
3) டீசல் எஞ்சினுடன் எஞ்சின் டைனமோ மானி நீங்களாக ஆட்டோமொபைல் பட்டறை

1. வார்ப்பகம்: வார்ப்பகத்தில் உள்ள அனைத்து உலைகளுக்கும் வெப்ப மூலம் LPG ஆகும். 19.05.2022 அன்று LPG விநியோகத்திற்கான குழாய்கள் பதிக்கும் பணி நிறைவடைந்தது. உலைகளை இயக்குவது வழங்குனரின் பொறுப்பாகும். தற்போதைய போக்குவரத்து பிரச்சினைகளை காரணம் காட்டி அவர் தனது வருகையினைத் தொடர்ந்தும் தாமதப்படுத்தி வருகிறார். Centrifugal Casting Demonstration Kit, Castings with Cores Demonstration kit, Hollow ware casting demo kit, அமுக்கி (Compressor) மற்றும் வெற்றிட தூய்மையாக்கி (Vacuum Cleaner), மற்றும் வார்ப்பக உபகரணங்கள் போன்றவை வார்ப்பக உலைகளை இயக்கிய பிறகு மட்டுமே பயன்படுத்த முடியும்.

2. தாள் உலோகப் பட்டறை மற்றும் பொருத்துதல் பட்டறை : 2ம் அரையாண்டு (E19) மாணவர்களுக்கான பொறியியல் பட்டறை II இல் தாள் உலோகப் பட்டறை மற்றும் பொருத்துதல் பட்டறையில் செயன்முறை அமர்வுகள் நடாத்தப்பட்டன.

3. டீசல் எஞ்சினுடன் எஞ்சின் டைனமோ மானி நீங்கலாக ஆட்டோமொபைல் பட்டறை:
   வாகனத் தடை சோதனை இயந்திரம், பெட்ரோல் எஞ்சின் மற்றும் சக்கர சீரமைப்பு பாகங்கள் போன்றன வாகனத் தடை சோதனை இயந்திர வழங்குனர் மூலம் நிறுவப்படவில்லை. பெட்ரோல் எஞ்சினானது வழங்குனர் மூலம் விளக்கமளிக்கப்பட வேண்டும்.

   சக்கர சீரமைப்பு பாகங்கள் பயன்படுத்த தயாராக உள்ளன. E17 பிரிவு மாணவர்கள் 6ம் அரையாண்டிற்கு மாறும் போது, மிக விரைவில் எதிர்காலத்தில் இந்தக் கருவி தொடர்பில் நாங்கள் அவர்களுக்கு விளக்கமளிப்போம்.

   ஏனைய அனைத்து நிறுவல் பணிகளும் இப்போது முடிக்கப்பட்டுள்ளதுடன் வேலைப்பட்டறை இப்போது முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.

(d) 2017 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் வாங்கப்பட்ட அனைத்து உபகரணங்களும் நிறுவப்பட்டு, மூன்று இயந்திரங்கள் தவிர ஏனையவை இயக்கப்படுகின்றன, அவற்றின் செயல்விளக்கம் நிலுவையில் உள்ளது. செயல்விளக்கம் முடிந்ததும், அவற்றின் இயக்கம் தொடங்கப்படும். செப்டம்பர் 2022 இற்குள் செயல்விளக்கத்தை நிறைவு செய்வதாக வழங்குனர் எங்களுக்கு உறுதியளித்துள்ளார்.

(e) இ.தெ.கி.ப.க. இன் நடப்புக் கணக்குகளை overnight முதலீட்டு ஒப்பந்தங்களுடன் இணைப்பது பற்றி தெளிவுபடுத்துவதற்காக வங்கியில் உள்ள பணியாளர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது. பின்னர், மேற்கூறிய வசதிகள் குறிப்பிட்ட கிளையால் நடைமுறைப்படுத்தப்படாததால், சம்பாதித்த நிதியில் அதிகமான தொகை குறுகிய கால வைப்புத்தொகையில் வைப்புச் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், இ.தெ.கி.ப.க. இன் நடப்புக் கணக்குகள் பராமரிக்கப்படும் மக்கள் வங்கியின் அட்டாளைச்சேனை கிளைக்கு இ.தெ.கி.ப.க. இன் நடப்புக் கணக்குகளை overnight முதலீட்டு ஒப்பந்தங்களுடன் இணைப்பதற்காக இ.தெ.கி.ப.க. உத்தியோகபூர்வ கோரிக்கையை அனுப்பியுள்ளது. அதைத் தொடர்ந்து, இ.தெ.கி.ப.க. இன் கோரிக்கையைச் செயற்படுத்துவதற்காக, இ.தெ.கி.ப.க. இன் கோரிக்கை மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அதன் கிளை மூலம் அனுப்பப்பட்டது.

இ.தெ.கி.ப.க. மேற்கூறிய செயன்முறையைத் தொடர்ந்தும் பின்பற்றும், மேலும் நடப்புக் கணக்குகளை overnight முதலீட்டு ஒப்பந்தங்களுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(f) 20.04.2011 திகதிய உயர்கல்வி சுற்றறிக்கை இல. 1/2011 இன் படி, 2011 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி உதவித்தொகை செலுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான தொடர்புடைய ஆண்டிற்கான ஆராய்ச்சிக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதிபெற, பின்வரும் தேவைகளில் ஒன்றையாவது பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) ஒரு சர்வதேச/உள்ளூர் ஆய்விதழில் சுய/குழுவின் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கான ஆதாரமாக போதுமான ஆதாரங்களை சமர்ப்பித்தல் மூலம் மற்றும்/அல்லது ஆராய்ச்சிக் கொடுப்பனவு வழங்கப்படும் ஆண்டைப் பொருத்தவரை, தொடர்புடைய சிம்போசியம்/ மாநாடு அல்லது தொழிநுட்ப அமர்வில் சமர்ப்பித்தல் மூலம்.

(ii) சர்வதேச இணைப்பு அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பேரவைகள் [தேசிய விஞ்ஞான மன்றம், தேசிய ஆராய்ச்சிப் பேரவை, விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கை பேரவை] மூலம் பெறப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் கீழ், அல்லது பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சி மானியத்தின் கீழ் பெறப்பட்ட நிதி மூலம், ஆராய்ச்சிக் கொடுப்பனவு கோரப்படும் ஆண்டில், ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுத் தொடர்கின்றன என்பதற்கான ஆதாரங்களை வளங்குவதன் மூலம்.

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளின் கீழ் ஆராய்ச்சியைத் தொடங்காத கல்விசார் ஊழிய உறுப்பினர்கள், ஆராய்ச்சியின் தன்மை, காலக்கெடு மற்றும் முறை ஆகியவற்றைக் கொண்ட ஒரு ஆய்வு முன்மொழிவை பந்தி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி ஆராய்ச்சிக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தோடு அவர்கள் தொடர்புடைய ஆண்டின் ஜனவரி 01 முதல் ஆராய்ச்சிக் கொடுப்பனவைப் பெறத் தகுதியுடையவர்கள்.

(iv) உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள கல்வி விடுப்பில் அல்லது ஏழாட்டை விடுப்பில் உள்ள கல்விசார் ஊழியர்கள், மேற்படி (i) இல் கூறப்பட்டுள்ளபடி ஒரு சிம்போசியம்/ மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் பிரதிகளைச் சமர்ப்பிப்பதன் மூலம், கல்வி வெளியீடுகள் அல்லது முன்மொழியப்பட்ட வெளியீடுகள் அல்லது கல்வி வெளியீடு அல்லது ஆராய்ச்சி வெளியீடு அல்லது அத்தகைய வெளியீடு தொடர்பான முன்மொழிவு தொடர்பான முன்மொழிவை கீழே உள்ள பந்தி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குழுவிடம் சமர்ப்பிப்பதன் மூலம்.

ஆராய்ச்சிக் கொடுப்பனவு பல-ஆசிரியர்களுக்கு வழங்கப்படலாம் மேலும் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு/ பீட ஆராய்ச்சிக் குழுவின் அங்கீகாரத்திற்காக

சம்பந்தப்பட்ட ஆசிரியர் அத்தகைய கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி குழுவின் தவிசாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர் குழுவின் ஒப்புதலை உபவேந்தருக்குத் தெரிவிக்கும் போது, சம்பந்தப்பட்ட ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் ஆராய்ச்சிக் கொடுப்பனவைப் பெற அவர் உரித்துடையவராகிறார்.

மேற்கூறிய முறையைப் பின்பற்றுவதன் மூலம், பணியாளர்கள் மேற்கூறிய தேவையான ஆவணங்களில் ஒன்றை பீட ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிடம் (FRMC) சமர்ப்பித்து ஆராய்ச்சிக் கொடுப்பனவைக் கோருகின்றனர். FRMC இன் பரிந்துரையின் பேரில், மேற்கூறிய தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்யும் ஊழியர்களுக்கான ஆராய்ச்சிக் கொடுப்பனவை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழு அங்கீகரிக்கிறது.

பெரும்பாலான ஊழியர்கள் ஆராய்ச்சி சான்றுகள் மற்றும் ஆராய்ச்சி முன்மொழிவுகளையும் சமர்ப்பித்தனர் மேலும் அவர்கள் ஆராய்ச்சி வெளியீட்டை உள்ளக ஆய்வு மாநாடுகள் மற்றும் ஸ்கோபஸ் (Scopus) மற்றும் வெப் ஆ.்.ப் சயின்ஸ் (Web of Science) இல் குறியிடப்பட்ட புகழ்பெற்ற ஆய்விதழ்களில் பிரசுரிக்கிறார்கள்.

நாட்டின் பிராந்திய மற்றும் தேசிய வளர்ச்சி தொடர்பாக இ.தெ.கி.ப.க இன் அறிஞர்களால் பல ஆராய்ச்சியாளர்கள் தொடர்பு கொள்ளப்படுகிறார்கள்.

புத்தாக்கங்கள் மற்றும் காப்புரிமையின் விளைவாக ஆராய்ச்சி மிகவும் குறைவாகவே உள்ளது. எவ்வாறாயினும், எங்கள் ஊழியர்களின் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியின் தற்போதைய ஈடுபாட்டின் காரணமாக எதிர்காலத்தில் புத்தாக்க மற்றும் காப்புரிமைகளுக்கான வாய்ப்பு உள்ளது.

இந்த புத்தாக்கங்கள் மற்றும் காப்புரிமைகள் பல்கலைக்கழக வணிக இணைப்பு செல் (UBL) மற்றும் ஸ்மார்ட் பின் மூலம் பணியாளர் உறுப்பினர்களின் ஆராய்ச்சி வெளியீட்டை வணிகமயமாக்குவதற்காக் கையாளப்படுகின்றன.

(g) பல்கலைக்கழகத்தின் தரவரிசையை உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் உயர்த்த இணையக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது நடைமுறையில் உள்ளது. (ஒரு இணைப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

மேலும், ஆய்வுகள் மற்றும் ஆய்வுகளிற்கான மேற்கோள்களின் மொத்த எண்ணிக்கையை மேம்படுத்துவதற்கும், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில்

மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் அதன் மூதவைக் கூட்டத்தில் ஏற்கனவே நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, இது பல்கலைக்கழகத்தின் தரவரிசையை மேம்படுத்தும் என்று அனுமானிக்கப்படுகிறது. மேலும், ஆய்வுகளிற்கான மேற்கோள்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் தெரிவுநிலையை மேம்படுத்த எங்கள் பணியாளர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம், இச்செயன்முறையானது வெபோமெட்ரிக் தரவரிசையில் பங்களிக்கும்.

(h) இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பாடத்திட்ட மறுசீரமைப்பு

பிரதான பாடத்திட்டத்தை திருத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், 2021/2022 கல்வியாண்டு முதல் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும். எதிர்காலத்தில், பாடத்திட்ட திருத்தத்தை சரியான நேரத்தில் பின்பற்றுவோம்.

முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பாடத்திட்ட மறுசீரமைப்பு

முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் வியாபார நிர்வாக இளமானி மற்றும் வணிகவியல் இளமானி பட்டத்திற்கான பிரதான பாடத்திட்ட மறுசீரமைப்பு செயன்முறையை பீடம் விரைவுபடுத்தியுள்ளது, மேலும் இது அடுத்த கல்வியாண்டு 2021/2022 இல் நிறைவடையும்.

(i) ஆரம்பத்தில், நிர்வாக கட்டிடம், பொறியியல் பீடம் (முன் கட்டிடம்), நூலகம், வேலைகள் துறை பகுதி, இயந்திரவியல் பொறியியல் துறை மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சில பகுதிகள் போன்ற கட்டிடங்கள் மட்டுமே இணைய இணைப்பைப் பெறும்போது இருந்ததால், அக்கட்டிடங்களுக்கு LEARN இணைய இணைப்பு வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், கலை கலாசார பீடம், முகாமைத்துவ பீடம், இஸ்லாமிய கற்கைகள் பீடம், பொறியியல் பீடம் / குடிசார் மற்றும் தொழிநுட்ப பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் நிர்வாக கட்டிடம் போன்ற புதிய கட்டிடங்கள் LEARN இணைப்பு பெறப்பட்ட பின்னரே கட்டப்பட்டன. இந்த கட்டிடப் பகுதிகளுடன் LEARN இனை இணைக்க, LAN வடமிடல் இணைப்புகள் ஏதும் இல்லை, மேலும் இந்தப் பகுதிகளுக்கு LAN இணைப்புகளை வழங்குவதற்கு கணிசமான அளவு பணமும் நேரமும் தேவைப்பட்டது.

ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக இந்தப் பகுதிகளுக்கு இணைய வசதிகள் அவசரமாகத் தேவைப்படுவதால், இந்தக் கட்டிடங்களுக்கான LAN வடமிடல் இணைப்புகள் பூரணப்படுத்தப்படும் வரை இந்தக் கட்டிடங்களுக்கு மொபிடெல் வை-பை இணையச் சேவைகளைப் பெற பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

அதைத் தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டில், LAN வடமிடல் இணைப்புகள் வழங்கப்பட்டதுடன் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சில பகுதிகளில் மாதாந்தம் ரூ. 250,000 இனை சேமித்து மொபிடெல் வை-பை இணைப்புகள் நிறுத்தப்பட்டன. மேலும் 2021 இல் LAN வடமிடல் நிறைவடைந்ததும் கலை கலாசார பீட கட்டிடத்திற்கு LEARN இணைப்பு வழங்கப்பட்டதுடன் சுமார் மாதம் ரூ. 150,000 இனை சேமிரித்து மொபிடெல் வை-பை இணைப்பு நிறுத்தப்பட்டது.

தற்போது, முகாமைத்துவ வர்த்தக பீடம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம், தொழிநுட்ப பீடம் மற்றும் பொறியியல் பீடம் (புதிய கட்டிடம்) ஆகிய பகுதிகளுக்கு மொபிடெல் வை-பை சேவைகள் பெறப்படுகின்றன. இந்தப் பகுதிகளுக்கு LEARN இணைப்பைப் பெறுவதற்காக LAN வடமிடல் இணைப்புகளை வழங்குவதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக, முன்மொழிவுகளை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

(j) கல்வி சார் தரங்கள்:

கல்விசார் தரங்களின் 424 ஆளணிகளில் 288 நிரந்தர ஆளணிகளும், 136 தற்காலிக ஆளணிகளும் உள்ளடங்கும். தற்போது வரையில் 249 நிரந்தர ஆளணிகள் நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 39 ஆளணிகளை நிரப்புவதானது தகுதியான விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையினாலும், வெற்றிடங்களை நிரப்புவதில் நாட்டில் நிலவும் திறைசேரித் தடையாலும் தாமதமானது. தற்காலிக ஆளணிகள் குறுகிய கால அடிப்படையில் நிரப்பப்படுகின்றன, அவை பெரும்பாலும் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளிலிருந்து நிரப்பப்படுகின்றன. ஆளணி வெற்றிடங்கள் ஏற்பட்டால், தற்காலிக பணியாளர்கள் உடனடியாக நிரப்பப்படுவர்.

கல்வி சாரா தரங்கள்:

- எந்திர வினைஞர், தரம்.II, நாற்று மேடையாளர், தரம்.II, தோட்டக்காரர், தரம்.II, ஓட்டுனர், தரம்.II மற்றும் உடற்பயிற்சிகூட உதவியாளர் (கீழ் தரம்), நூலக உதவியாளர் போன்ற போன்ற UPL தர ஆளணிகளை பணியமர்த்துவதனை கல்வி அமைச்சு இடைநிறுத்தியது.

- முகாமைத்துவ உதவியாளர் தரம்.III (வெளிப் பிரிவு) இற்பான ஆட்சேர்ப்பு இடம்பெற்று, தேர்வுக் குழுவின் பரிந்துரை பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- முகாமைத்துவ உதவியாளர், தரம்.III (உள் பிரிவு) ஆளணிக்கான ஆட்சேர்ப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- தொழிநுட்ப அதிகாரி (ICT) தரம்.III ஆளணிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது, மேலும் பயிற்சி தொழிநுட்ப அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைபெற்றுவருகின்றன.

- துணை விடுதிக்காப்பாளர், தரம்.II (முழு நேரம்) மற்றும் மார்ஷல், தரம்.II பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

- PHI மற்றும் மருந்தாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன, ஆனால் தகுதியான விண்ணப்பங்கள் பெறப்படவில்லை.

(k) எதிர்பாராத கோவிட் 19 மற்றும் தொடர்புடைய துறைகள்/ பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதி வளங்கள் காரணமாகவே பிரதானமாக இந்த நடவடிக்கைகள் தொடங்கப்படவில்லை. போதுமான நிதி கிடைக்கப்பெறும் என எதிர்பார்த்து திட்டங்கள் உருவாக்கப்பட்டன. எவ்வாறாயினும், எங்கள் செயல் திட்டத்தில் நாங்கள் திட்டமிட்டபடி நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதில்லை. இது ஒவ்வொரு ஆண்டும் தொடர் பிரச்சினையாக இருந்து வருகிறது. ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் ஏற்கனவே அந்தந்த பீடாதிபதிகள்/ துறைத் தலைவர்கள் மற்றும் பிரிவுகளால் தங்கள் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(I)

ஆண்டு	பீடம்	ஊழியர்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை ரூபா.	ஆய்வுகளை முடித்த அதிகாரிகளின் எண்ணிக்கை	தற்போதைய நிலை
2017	FE	2	198000.00	1	1 ஊழியர் – நிறைவுசெய்தார் 1 ஊழியர் - விலகிக் கொண்டார்
	FIA		253000.00		
2018	FMC	6	101235.00	6	6 ஊழியர்கள் - நிறைவுசெய்தார்கள்
	FAS		210000.00		
	FAS		400000.00		
	FAS		500000.00		
	FMC		200000.00		
	FMC		50000.00		
2019	FAS	8	402700.00	4	4 ஊழியர்கள் - நிறைவுசெய்தார்கள் 2 ஊழியர்கள் – விலகிக் கொண்டார்கள் 2 ஊழியர்கள் – ஆராய்சியினை மேற்கொள்கிறார்கள்
	FE		590000.00		
	FIA		505750.00		
	FAS		495850.00		
	FMC		290000.00		
	FMC		300000.00		
	FMC		260000.00		
	FMC		100000.00		
2020	FE	4	200000.00	1	1 ஊழியர் – நிறைவு செய்தார் 3 ஊழியர்கள் – ஆராய்சியினை மேற்கொள்கிறார்கள்
	FE		500000.00		
	FE		489000.00		
	FE		499950.00		
2021	FAS	11	504440.00		11 ஊழியர்கள் – ஆராய்சியினை மேற்கொள்கிறார்
	FT		249300.00		
	FT		994957.00		
	FE		580000.00		
	FAS		499800.00		
	FMC		546000.00		
	FMC		240000.00		
	FT		980466.00		
	FT		999913.00		
	FAS		396461.00		
	FAS		497000.00		

2017ம் ஆண்டில், ஒரு ஊழிய அங்கத்தவர் ஆராய்ச்சியை முடித்தார், மற்றவர் நாட்டில் நிலவும் சூழ்நிலையால் தனது ஆராய்ச்சியைத் தொடர முடியாததால் பகுதி மானியத்தைத் திருப்பிக் கொடுத்ததன் மூலம் தனது ஆய்விலிருந்து விலகினார்.

2019ம் ஆண்டில், நான்கு ஊழிய அங்கத்தவர்கள் ஆராய்ச்சியை முடித்து, அவர்களது இறுதி அறிக்கையை சமர்ப்பித்தார்கள். இரண்டு ஊழியர்கள் எந்த ஆராய்ச்சி நிதியையும் பயன்படுத்தாமல் மானியத்திலிருந்து விலகிக் கொண்டனர்.

இரண்டு பணியாளர்கள் இப்போது ஆய்வின் இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் இறுதி அறிக்கையைத் தயாரிக்கின்றனர்.

2020ம் ஆண்டில், ஒரு ஊழிய அங்கத்தவர் ஆராய்ச்சியை முடித்தார், ஏனைய மூன்று ஊழியர்களும் இப்போது தங்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகின்றனர், மேலும் நாட்டில் நிலவும் சூழ்நிலை மற்றும் கோவிட் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக தங்கள் ஆராய்ச்சியை முடிக்க 31.12.2022 வரை கால நீட்டிப்பு வழங்குமாறு கோரியுள்ளனர்.

(m) 2020ம் ஆண்டின் போதான இருப்பு சரிபார்ப்பு 2020ம் ஆண்டில் நடாத்த திட்டமிடப்பட்டது. ஆனால் கோவிட் 19 போன்ற தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மை மற்றும் அதைத் தொடர்ந்து வந்த நாடு முடக்கல்கள் காரணமாக, சரிபார்ப்பை நடாத்தியிருக்க முடியாது. 100,000 இற்கும் அதிகமாக சேகரிப்பு இருப்பதால், இருப்பு சரிபார்ப்பு செயல்முறையை மேற்கொள்ள அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் நிச்சயமற்ற தன்மையின் காரணமாக பெரும்பாலான பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிகின்றனர். ஒவ்வொரு பீடத்தின் மாணவர்களும் இப்போது தேர்வு நோக்கங்களுக்காக பல்கலைக்கழகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நூலகம் மாணவர்களை நிரப்பி, வரவிருக்கும் தேர்வுக்குத் தயாராகிறது. நூலகச் சேவைகள், குறிப்பாக இரவல் வழங்கும் சேவைகள் இருப்பு சரிபார்ப்பின் போது இடைநிறுத்தப்பட வேண்டும், இதனால் மாணவர்கள் தேர்வுகளுக்குத் தயார் செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது. இருப்பினும், 33வது சிரேஸ்ட பணியாளர்கள் கூட்டத்தில் இருப்பு சரிபார்ப்பினை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, சரிபார்ப்புக்கான தயாரிப்பு நடைபெற்று வருகிறது. தேர்வுகள் முடிந்ததும் இருப்பு சரிபார்ப்பு நடாத்தப்படும்.

பேராசிரியர். ஏ. ரமீஸ்
உப வேந்தர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பிரதிகள்: சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்

இணைப்பு

South Eastern University of Sri Lanka

Internal Audit <internalaudit@seu.ac.lk>

Fwd: Updating the Google Scholar and ResearchGate Profiles of Staff

1 message

Vice Chancellor, South Eastern University of Sri Lanka <vcseu@seu.ac.lk> Thu, Sep 1, 2022 at 11:50 PM
To: Internal Audit <internalaudit@seu.ac.lk>, "Thahir S.L.M. slmthahir" <slmthahir@seu.ac.lk>

Dear all,

Pls check the mail below in relation to ranking of our University. I have appointed a Web-Committee to elevate the ranking of the University locally and globally that is now in the process of doing so.

You can quote this initiative to the query on ranking of the University by General Audit.

Thank you.

VC

---------- Forwarded message ---------
From: **Vice Chancellor, South Eastern University of Sri Lanka** <vcseu@seu.ac.lk>
Date: Fri, 2 Sep 2022 at 10:16 AM
Subject: Updating the Google Scholar and ResearchGate Profiles of Staff
To: Academic Staff SEUSL <all-academic-staff@seu.ac.lk>
Cc: Deans <deans@seu.ac.lk>, Registrar SEUSL <registrar@seu.ac.lk>, Academic Heads <academic-heads@seu.ac.lk>, MZM Rizan <mzmrizan@seu.ac.lk>

Dear Academics,

I am very much pleased to know that almost all of our academic staff have their presence on Google Scholar, which is a freely available web search engine that indexes the entire text or metadata of academic publications and ResearchGate, which is a social networking website where researchers and academics share their publications and engage with each other. This enables our university to make an impact in academia. Hence, I would like to invite and insist all Deans of faculties and Heads of departments to encourage all their staff to keep on updating their profiles on Google Scholar, ResearchGate, ORCID and the like with latest publication details which will improve the visibility of their research work and beacon citation from academics across the globe.

At the same time, it has been brought to my notice by our Web Team that some of our academics' profiles on Google Scholar and ResearchGate consist of academic works of others (with similar names to our staff). This does not happen intentionally. Sometimes, we might have accidently "accepted" the suggestions emailed to us by Google Scholar or ResearchGate so that all works of outsiders are listed under our staff's profile. However, this has been taken seriously by some world University Ranking entities such as Webometrics. They deem this as BAD PRACTICE and INTENTIONAL to improve our Ranking. This will sometimes result in EXCLUSION of our university from their ranking. They have categorically mentioned that "If multiple profiles of authors not belonging to the University are added intentionally to increase its rank, the institution will be EXCLUDED of the ranking." (https://www.webometrics.info/en/transparent). Therefore, I would like to suggest and encourage our staff to take this matter seriously and clean their profiles up-to-date as soon as possible.

Furthermore, it is noted that some of our staff who have gone abroad to pursue their higher studies have changed their Google Scholar profile's email to their generic email address such as from Gmail. This practice should be avoided. As academic staff attached to the SEUSL, they should make sure that their Google Scholar profile's email address is from the SEUSL domain i.e., the email address containing "seu.ac.lk".

Also, I would like to invite all Heads of departments to request their newly recruited academic staff to update their Google Scholar, ResearchGate and ORCID profiles using our UNIVERSITY EMAIL addresses (this applies to all our staff).

As responsible academic members of the University, let's strive together to elevate the ranking of our University globally and locally.

Thank you

Prof.A.Rameez, Ph.D (NUS), M.Phil (UPDN), PGD (UoB-UK), B.A.Hons.(SEUSL)